
# கமலம்



மலர்: 5

மலர்வு: தி.பி.துலாம் 2029
கி.பி.ஐப்பசி 1998

தமிழால் தமிழுக்குள்
தமிழனைத் தேடுவோம்



## தமிழ்த்தாய் வணக்கம்

உலகம் யாவிலும் உரைமொழி ஆக்கியுப்
திலகமாய்க் குமரிநன் நாட்டிடை நின்றும் பூ
---உலகம்...

எங்கும் மானிடம் ஏற்புறப் பண்பெனுப்
அங்கம் ஆகினாய் அன்னையுன் தாள் தலைக்கே
---உலகம்...

பலமொழி உலகிடைப் பயின்று வளமுறட்
பலமுதற் பொருள்படு சொற்கள் நல்கியே
நலமுறப் பிறமொழி நின்றாய் இயற்கையின்
பலமுறப் பார்முதற் பிறந்த என்தமிழே!---உலகம்....
குமரியில் முதலெனப, பிறந்தவன் வாயிடைட்
புகுந்தனை முப்பிரி விலக்கணம் கொண்டே
உலகிடைப் பலவினம் தோன்றிய பின்னுப்
அலகிலாப் புகழுறப் பரந்தனை தமிழே!---உலகம....
மூண்டெழு புதுமையிற் பலமொழி பிறந்துப்
தோற்றம் அழிவெனப் பலமொழி சிதைய
மூத்தும் காத்தும் முருகினிற் சிறந்துப்
போற்றும் என்தமிழே புவிதனில் நிலைத்தாய்.---உலகம்,...
வள்ளுவன் கம்பன் வான்புகழ் இளங்கோ
தெள்ளிடு புலமைத் திருமகள் அவ்வை
சங்கச் சான்றோர் சாற்றிடப் பெருகிய
மங்காப் புகழே! என்தமிழே! பணிந்தேன்.----உலகம
பாடல்....அழலாடி

| கனல் | இதழெண் |
|---|---|
| ஆசிரியம் | 2 |
| தமிழ்பேசும் கலப்புகளும் தமிழகத்தில் தமிழும் | 3 |
| வள்ளுவவிஞ்ஞானம் | 4 |
| விசுவின் அரட்டை அரங்கம் ஒரு பார்வை | 9 |
| தமழ் இலக்கணம் கூறும் நால்வகைப் பெயர்ச்சொற்கள் யாவை? | 12 |
| கமலக்கனலில் கனன்றவர்கள் | 17 |
| வயிறு பற்றி எரிகிறதே! | 20 |
| தூக்கம் கலையட்டும் | 24 |
| கண் ஏன் எனக்குக் கடவுளே! | 27 |
| இறுமாப்பும் இழிதகவும் | 28 |
| கம்பரசம் | 32 |
| புதிய தமிழ்வழி | 38 |

தமிழன்பர்களே! கமலம் தன்னால் இயன்றளவு தனித்தமிழ்ச் சொற்களைத் தேடி உருவாக்க முயல்கின்றது. இத்துறையில் ஆர்வம் உள்ளவர்கள் தாங்கள் கண்டறியும் நறுந்தமிழ்ச் சொற்களைத் தந்துதவுங்கள். ------ ஆசிரியர்

இனிக்கும் ஒரு செய்தி. தனித்தும் தமிழாலயங்களிலும் பத்தாம் வகுப்பு வரை கற்றுத்தேறி, உயர்கல்வி கற்பதற்கு ஆர்வமுடன் ஏங்கி நிற்கின்ற இனிய தமிழ் மாணவர்களே! மற்றும் தமிழில் உயர்கல்வி பெற ஆர்வமுடன் உள்ளவர்களே! உங்களுக்,கு ஓர் அரிய சந்த்த,ர்பம் கிடைத்திருக்கிறது. குறள்மணி பட்டத்தேர்வு மூன்றாண்டுக் கல்வி நெறி, ஐரோப்பாவவை மையமாகக் கொண்டு செருமனியில் நடாத்தப்படவிருக்கிறது. 1999 ஆவணியில் 16 வயது பூர்த்தியடைந்தவர்களும் அதற்கு மேற்பட்டவர்களும் வயதெல்லையின்றி, இருபாலாரும் தேர்விற்கு தோற்றலாம். தேர்வு பற்றிய சகல செய்திகளும், மிக விரைவில் உலகெங்கும் விளம்பரமாகும். இத்தேர்வு பி.ஏ என்கிற கலைமானி பட்டத் திற்கு நிகராகும். மேற்படி தேர்விற்கான எண்பேராயம் என்கிற அறிஞர் குழுவிற்கு, தமிழகம் மாண்புமிகு தமிழ்நலத்துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையேற்றுள்ளார் என்பதையம் தெரியப்படுத்துகிறோம். தேர்வில் பங்கு பெற விரும்புவோர் கமலத்துடன் தொடர்பு கொள்க.

தமிழ் எங்கள் உயிருக்கு நேர்
தமிழீழம் எங்கள் வாழ்விற்கு வேர்

விழிப்போடிருங்கள்!

அன்புத் தமிழகத்துத் தமிழ்ப்பெருங் குடிமக்களே!

நீங்கள் இசுலாம், கிறீத்தவம், சைவம் எதுவாக இருந்தாலும் எம்மதமும் சம்மதமாக, இன்று ஒன்றுபட்டு இன்புற்று இருக்கிறீர்கள். காரணம் நீங்கள் தமிழர்கள் என்கிற தமிழுணர்வே. அந்த ஒற்றுமையைக் காத்து தமிழகத்தை சிறப்புறுத்த என்றும் விழிப்போடிருங்கள்.

ஏறக்குறை இரண்:டாயிரங்களுக்கு முன்பிருந்தே மதத்தால் மக்களை ஏமாற்றி வாழ்ந்தவர்கள் ஆரியப்பேயர்கள். நேற்று மட்டுமல்ல இன்றும் தமிழகத்தைப் பிடித்துள்ள பீடை, தமிழ் பேசிக்கொண்டு மதத்தின் பெயரால், மக்களை ஏமாற்றி வாழ்கிற, ஆரியக் கலப்புகள் தமிழகத்தில் நிறைந்து இருப்பது தான். ஆயிரம் இரண்டாயிரங்களுக்கு முன் உலக மனிதன் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த காலத்தில், தமிழர் நாகரீகத்தில் உயர்ந்து எம்மதமும் சம்மதமாய் - சமரச சன்மார்க்கராய் உயர்ந்து வாழ்ந்தார்கள். ஆனால் நாகரீகத்தின் பொற்காலம் என்று சொல்லப்படுகின்ற இருபதாம் நுற்றாண்டின் இறுதியில் கூட, இந்த ஆரியப் பேயர்கள் மதத்தின் பெயரால் மக்களை அடக்க முயல்கின்றார்கள். முன்னர் ஏமாற்றி மதத்தை உயர்த்திக் காட்டி மதத்துக்குள் அடக்கினார்கள். இப்போது அது முடியாதாகையால் மதவெறியை ஊட்டி அழித்து அடக்க நினைக்கிறார்கள் மக்களுடைய ஒற்றுமையைக் குலைத்து விட்டால் மீண்டும் இந்தியாவில் தம் ஆட்சியை வலுப்படுத்தலாம் என்று நினைக்கிறார்கள்.

அயோத்தி மசூதி இடிப்பும் அப்படிப்பட்டது தான். சாதாரண பொதுமக்களா அயோத்தியை இடித்தார்கள்?நாட்டின் முன்னணிப் பிரசைகளால், அரசியல் தலைவர்களால் இடிக்கப் பட்டது. இந்திய உபகண்டத்தின் சொந்தக்காரனான தமிழன் தற்போது ஆரிய அடிமைத்தனத்தை உடைத்துக்கொண்டு தமிழுணர்வால் ஈர்க்கப்படுவதைக் கண்ட வடவன், புதிதாகத் தமிழகத்துள் மதக்கலவரங்களைத் தூண்ட முயல்கிறான்

அதற்குள்- அவனுடைய சதிக்குள் வீழ்ந்துவிடாமல், மத வழி சிந்தியாமல் மொழிவழி சிந்தித்து ஒற்றுமையைக் காத்து நில்லுங்கள். தவறின் ஏக இந்து இந்தியா என்ற வெறியுணர்வை வளர்த்து, இந்தியத்தைச் சிதைத்து-இந்தியை நிலைநிறுத்தி விடுவான்-கவனம், எச்சரிக்கிறேன்! ---------அழலாடி

# தமிழ்பேசும் கலப்புகளும், தமிழகத்தில் தமிழுப்

ஓராண்டுக்கு முன்னர், தமிழையழிக்கப் பிறந்த, தமிழகராதி, "க்ரியாவின் தற்காலத் தமிழகராதி" பற்றிக் கமலம் கனன்றிருந்தது. அதற்குப் பிறகு கூடத் தமிழகத்தில், யாருப் அதை எதிர்த்துத் குரல் கொடுத்ததாகத் தெரிய வில்லை. எனினும் அந்த அகராதி சாதாரண மக்களிடம் போய்ச்சேராது என்ற வகையில் திருப்தி அடையலாம்.

ஆனால், தமிழ் ஒளிநாடகத் துறையால், தமிழ் இலக்கணத்திற்குப் புறம்பாக, சொற்புணர்ச்சிப் பிழைகளை ஒளிநாடகப் பெயர்களில் புகுத்துகிறார்கள். சில இடங்களில், சொற்புணர்ச்சியின் போது வல்லின மெய் இரட்டிக்கும் என்னுப் விதி மீறப்பட்டு, இரட்டித்தல் தவிர்க்கப்படுகிறது. உதாரணமாக-- அடிமை±பெண் = அடிமைப்பெண் என்பதற்குப் பதிலாக, அடிமைபெண் என்று எழுதுகிறார்கள். ஏன் இப்படிப் பிழையாக எழுதுகிறீர்கள் என்று கேட்டால், எண் விஞ்ஞானம் என்கிற சோதிடத்தின் பெயரால் அப்படி எழுதப்படுகிறதாம், வடமொழியில் தொடங்கிய தமிழ்ப் புரட்டல், இப்போ எண்விஞ்ஞானவழி, ஒளிநாடகத்தாலும் தொடரப்படுகிறது. தமிழகத்துத் தமிழர்களும், தமிழக அரசும், தமிழ் காக்கும் அமைச்சர்களும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழ் அன்னிய மொழிக் கல்வியாலுப் மிக வேகமாக அழிக்கப்பட்டு வருகிறது, போதாக் குறைக்கு இலக்கணமே அழிக்கப்படுகிறது.

தமிழனுக்கு மட்டுமல்ல, உலகமொழிகளுக்கே அன்னையான, அருந்தமிழைக் காப்பாற்ற அரசியல் வாதிகளால் முடியாது. ஐம்பது ஆண்டுகளாக, வாய்வெட்டால் தமிழகத்து ஆட்சியில், ஆட்கள் தான் மாறினார்களே தவிர, தமிழுக்காக வேறு ஒன்றுமே நடக்கவில்லை. அன்று தொடங்கிய பெயர்ப்பலகைப் போராட்டம், இன்றும் நடக்கிறது என்றால்! இவர்களா தமிழைக் காப்பாற்றப் போகிறார்கள்?

எனவே, அன்புத் தமிழகத்துத் தம்பிகளே! வீறு கொண்டெழுந்து விட்ட மறத்தமிழ் இளைஞர்களே! நீங்கள் தான் புறப்படவேண்டும். சொல்லுங்கள், கேளாவிட்டால்? செய்யுங்கள்---தண்டம்!!! தமிழகத்தில் தமிழைப், பிழைப்பவன், தப்பமுடியாது என்ற நிலையைக் கொண்டு வாருங்கள். நேற்றிருந்தார் இன்றில்லை என்னும் பெருமையுடையது உலகு. நாங்கள் நாளையோ, நாளை மறுநாளோ? எங்கள் தமிழோ

என்றும் உள்ளது. ஆதி அந்தம் இல்லாதது. அத்தமிழ்! இனிய முத்தமிழ்! வாழ, நம் வாழ்நாள் தேவைப்படின், தயங்கலாமா? எண்ணித் துணிக.! --------- நிர்த்தனப்

## வள்ளுவவிஞ்ஞானம்

நாங்கள் அறிந்திருக்கக் கூடிய, இலக்கிய-வரலாற்று எல்லைகளுக்குள்ளே, பல உலக ஊழிகளைக் காண்கிறோம். சங்கத் தமிழும் சரி, கிறீத்துவ வேதாகமும் சரி இந்த ஊழிகளைப் பற்றிப் பேசுகின்றன. அவை வெறும் கற்பனைகள் அல்ல என்பதை, இன்றைய விஞ்ஞானம் உறுதிப்படுத்துகிறது. அன்று கடலாக இருந்த இடம் இன்று விண் முட்டும் இமயமாக இருப்பதையும், மண்ணாக இருந்த இடம் பாதாளம் தொடும் மரியான ஆழியாக இருப்பதையும் நாம் அறிவோம். (மரியான ஆழி பசுபிக் மாகடலில் காணப்படும், உலகில் மிக ஆழமான கடற்பகுதி) இன்றும் வங்கக்கடலில் பங்களா தேசத்திலும், தமிழீழத்தில் மட்டுநகரிலும், காலத்திற்குக் காலம், வெள்ளப் பெருக்குகளும் சூறாவளிகளும் நாட்டை அழிக்கின்றன.

இவை எவ்வாறு நிகழ்கின்றன? இந்த அண்டம் (எமது உடுத்தொகுதியும் அதைப்போல் கோடிக்கணக்கான உடுத் தொகுதிகளையும் கொண்டது பேரண்டம்) ஐம்பூதங்களால் ஆக்கப்பட்டுள்ளது. ஐம்பூதங்களாவன--நிலம், நீர், தீ, வளி, விண் என்பனவாகும். ஒவ்வொரு பூதங்களும், பல்வேறு மூலகங்களின் கூட்டினால் ஆனவை ஆகும். இக்கூட்டு, உயிரினங்களுக்குப் பயன்படும் வகையில் அளவறிந்து சேர்க்கப்பட்டுள்ளது. உதாரணமாக வளியில் உள்ள கரியமிலவாயுவும் உயிர்வாயுவும் உரிய அளவில் மாறுபடின் உயிர்கள் இறக்கவும், வளியில் தீ மூளவும் செய்கிறது. அதேபோல் நீராகியுள்ள, நைதரசன் வாயுவும் உயிர்வாயுவும், பிரிக்கப்படின் அல்லது அளவு மாறின் தீ மூளும். அதாவது இயற்கையானது, அண்டம் முதல் அதன் கூறுகளான பிண்டங்கள்-தாவரசங்கமங்கள் (உலகில் படைக்கப் பட்டுள்ள உயிரினங்கள்) வரை அனைத்தும் இந்த ஐம்பூதங்களைக் கொண்டு, அளவறிந்து சமைத்துள்ளது. அண்டத்தில் உள்ள ஐம்பூதங்களின் அளவமைப்பில் மாற்றம் நிகழும் போதுதான், ஒரு பூதம் வலிமை மிகுந்து, மற்றொன்றின் மேல் ஆதிக்கம் செலுத்தும் போது தான், உலகில் பிரளயங்கள் தோன்று கின்றன. சூறாவளி, தீ, வெள்ளப்பெருக்கு இவ்விதமாக அனைத்துக்கும் மூலமான அண்டமே, ஐம்பூதங்களின்

மாறுபாட்டால் அழியும் எனில், பிண்டங்களின் நிலை என்ன? பிண்டங்களிலும் விதியை மதியால் வெல்லக் கூடிய மனிதப் பிண்டத்தின் நிலை என்ன? சொல்லும் தரமன்று. இதை அறிந்து தான் வள்ளுவன், தன் நூலிலே, பலவிடங்களில் பல நுட்பமான அறிவியற் கருத்துகளைக் கூறியுள்ளான். ஆனால் பார்ப்பாரால் எழுதப்பட்ட உரைகள் அவற்றை வெளிக் கொணரவில்லை.

அதிகாரம் 28- கூடாவொழுக்கப்

வஞ்சமனத்தான் படிற்று ஒழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகுப்

இக்குறளுக்கு வஞ்சமனத்தை உடையவனது மறைந்த ஒழுக்கத்தை, மற்றவர்களுக்கு மறைத்தாலும், அவனது உடம்பினுள்ளே கலந்துள்ள பூதங்கள் அறியுமாதலால் அவை தாங்கள் சாட்சியாக உள்ளதை எண்ணி நகும். என்று பொருள் தரப்பட்டுள்ளது. இப்பொருள் சரியானது அல்ல, பூதங்கள் இயல்புணர்வு மட்டும் உடையவை. உயிருணர்வோ- அறிதலோ அற்றவை. ஆதலால், அவை நகும்--தம்முள் சிரிக்கும் என்று பொருளால் உயர்திணைப் படுத்தியமை தவறாகும்.

சரியான பொருள், வஞ்ச மனத்தான்--வஞ்சனை பொருந்திய மனத்தை உடையவன்--பிறரின் பொருளையோ பிறன் மனையையோ, ஏதோவொன்றைப் பிறரறியாமல் கவரத் திட்டமிட்டுக் கொண்டு, வெளியில் நல்லவனாக நடிப்ப வனுடைய: படிற்று ஒழுக்கம்--உள்ளொன்று வெளியொன்று ஆன மறைந்த ஒழுக்கத்தால்: பூதங்கள் ஐந்தும்-- நிலம், நீர், தீ, வளி, விண் என்று சொல்லபபடும் ஐந்து பூதங்களும் (அவனுடைய உடலின் மூலகங்களான ஐம்பூதங்கள்) அகத்தே நகும்--அவனுடைய உடல் உள்ளம் ஆகிய இரண்டினுள்ளும் நின்று எள்ளி நகையாடும். நகைத்தல் என்பது சிரித்தல்- எள்ளிநகையாடுதல் இரண்டையும் பொருள் கொள்ளும் எனினும் வஞ்சமனத்தின் பொருட்டு வரின் எள்ளி நகையாடுதலே சரி. இங்கே எள்ளி நகையாடும் என்ற கருத்தைத் தந்ததன் மூலம் வள்ளுவர் அவை தம் இயல்பில் திரியும் என்று கூறியுள்ளார்.

விளக்கம்--- உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று காட்டிப்பேசி, பிறன்பொருளைக் கவர, கூடாவொழுக்கத்தின் பாற் செல்ல எண்ணும்போது, அவனது உடல் உறுப்புகளில், உள்ள த்தில், பூதங்களின் சமநிலை குன்றும். அப்படிக் குன்றும் போது அவனுடைய உடல்நலனுக்கு வேண்டிய பயன்பாட்டைப் பூதங்கள் இழந்துவிடும், அதனால் பிணியையோ அழிவையோ அடைவான்.

வஞ்சமனம் என்பது தான் தவறு என உணர்ந்தும், மாற்றார் காணின் தண்டனை அல்லது பழிப்புக் கிடைக்கும் என்றும் தெரிந்து கொண்ட பின், அத்தவறைச் செய்யத் துணியும் மனநிலை. அந்நிலையில் அக்கம் பக்கம் பார்த்து, திருதிரு என்று விழித்துக் கொண்டு, தவறைச் செய்ய முயலும்போது, வளியின் வலுக்கூடி மூச்செறிந்து, அதனால் தீயின் வலுக்கூடிக் கண் சிவந்து, வளியின் வலிமையால் நீர் சமநிலை குறைந்து இரத்தவோட்டும் வேகம் கொண்டு, உயரழுத்தம் அடைந்து, இதயம் வீங்கிச் சுருங்கி, உடல் இயல்பை இழக்கிறது. இதனால் மரணம் கூட நிகழும். அச்சத்தின் காரணமாக மாரடைப்பு ஏற்படுதல் மிகமிக இயல்பு.

ஒருவேளை அவன் தன் வஞ்சச் செயலில் வெற்றி யடைந்து விட்டாலும், ஐயோ! நான் செய்த செயல் வெளிவந்து விட்டால், அறியக் கூடாத பலர் அறிந்துவிட்டால் என்ன நடக்குமோ? காவலர் ஒற்றறிந்து விட்டால் கொடுந்தண்டனை கிடைக்குமே, கல்லெறிந்து கொல்வார்களோ? என்று எண்ணாத வெல்லாம் எண்ணி, உறக்கம் இன்றி ஊன்துறந்து, ஏங்கிச் கிடக்கும் போது அவனுடைய உடலில், பூதங்கள் வலிந்துப் மெலிந்தும் இயல்பில் மாறுபடுவதால், உடல்நிலை இயல்பை இழந்து நோய்வாய்ப்படுகிறது. பிணியாளனாகிறான், அன்றிப் பிணமாகிறான்.

இதையே தான் வள்ளுவர் நகும் என்று சொன்னதன் மூலம் எள்ளிநகையாடும் என்றார். எள்ளிநகையாடல்--பழித்துத் தாழ்த்துவதன் மூலம் ஒருவனை அழித்தல்.

எனவே, வஞ்சனையுடைய மனத்தையும்- செயலையும் உடையவனின், உடலின் கூறுகளான ஐம்பூதங்கள், அவனுடைய செயலின் காரணமாகத் தம் இயல்பில் மாறுபட்டு, அவனை அழிக்கும் ஆதலால், கூடாவொழுக்கத்தில் ஈடுபடாதீர் ஈடுபடின் அழிவீர் என்று, சோதிடத்தின் வழி,ஆரியக் கடவுள் மாயைகளின் வழிக் கூறாமல், தமிழனறிந்த இயற்கைவழி, உடலியல் அறிவியல் வழிக் கூறினான்.

### அதிகாரம் 12, நடுவுநிலைமை

கெடுவல் யான் என்பது அறிக தன் நெஞ்சப்
நடுவு ஒரீஇ அல்ல செயின்.

கெடுவல் யான் என்பதறிக--நான் அழிவேன் என்பதை உணர்க, தன் நெஞ்சம்-- தன்னுடைய உள்ளம், நடுவு ஒரீஇ அல்ல செயின்-- உணர்ந்தும் நடுவு நிலைமை தவறி நீதிக்குட்

புறம்பானதைச் செய்தால். நீ நீதியைச் சரியானதை உணர்ந்து கொண்டும், நடுவு நிலை தவறி, பக்கம் சார்ந்து நடப்பாயானால் அழிந்துபடுவாய் என்பதை அறிக.

நீதிக்குப் புறம்பானதை ஒருவன் செய்தால் அந்த நீதி வந்து, அவனை அழித்துவிடப் போவதில்லை. அவனுடைய மனமே, நான் தவறு செய்துவிட்டேனே கண்டுபிடிக்கப்பட்டால் கேடு விளையுமே, என்று அஞ்சி அஞ்சியே சுகமிழப்பான். இதைத்தான் மனச்சாட்சி என்பர்.

அதிகாரம் 31- வெகுளாமை

நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற.

இக்குறளுக்குப் பரிமேலழகன் தங்கள் இனம் சாரும்படி, உலகியல் வாழ்வுக்குப் புறத்தே போய், துறந்தா ருக்காக இப்பாடல் பாடப்பட்டதாகப் பொருளுரைத்துள்ளான்.

துறந்தாருக்கு அதனால் ஏற்படும் நகையையும், மனத்தின் கண் ஏற்படும் உவகையையும் கொல்கின்ற சினத்தை விடப் பகை வேறுண்டோ? என்று.

சினத்திற்கும் சிரிப்பிற்கும் தொடர்பே கிடையாது என்று யாரும் சொல்லித் தெரியவேண்டியதில்லை. சினம் ஏற்பட்டவுடன் இரத்தக் கொதிப்புப் பலருக்கு ஏற்படுவதை நாம் பட்டறிவால் அறிந்திருக்கிறோம்.

நகையும் உவகையும்--உற்றாரோடு உறவாடி வாழ்வ தால் என்றும் சிரித்த முகமும் உள்ளக் களிப்பும், கொல்லும் சினம்--கோபம் எழுந்தவுடன் தன்னிலை இழந்து செய்கின்ற செயல் மகிழ்வைக் கொல்லும், பகையும் உளவோ--சினத்தைத் தவிர வேறு பகை வேண்டாம். அதுவே போதும் அவனை அழிப்பதற்கு. சினம் எழுந்தவுடன் உடலுள்ளே இரத்தப் பெருக்கு, மூச்சடைப்பு, உடல்நலம்குன்றி, வாழ்வின் மாண்புகள் சிதறி, மகிழ்வும் இன்பமுமான வாழ்வு மண்ணாகிறது.

இவற்றிலிருந்து எங்களுக்கு வள்ளுவர் சொல்ல விரும்பியதும், மறைக்கப்பட்டு விட்டதுமான உடலியல் அறிவியல் யாதெனின், இந்த அண்டம் ஐம்பூதங்களின் சேர்க்கையால் ஆனது. அண்டத்தின் தோற்றங்களான பிண்டங்கள்--படைப்புகள், அதே ஐம்பூதங்களால் தான் ஆக்கப் பட்டள்ளது. இப்பூதங்கள் எந்தப்படைப்பிற்கு எந்த அளவில் சேர்க்கப்பட வேண்டும் என்று, அளவிடப்பட்டுச் சேர்க்கப் பட்டுள்ளது. அச்சேர்க்கைக்கு அமைய, வைரமரம்-சோத்திமரம், வைரக்கல்-மென்கல், கொடிய மிருகங்கள்-

மென்மையும் அழகும் உடையவை என்றெல்லாப் அமைந்துள்ளன. இந்த அளவுகளில் மனிதன் படைக்கப்பட்ட பின், அவன் இயற்கை வாழ்வு வாழ்ந்த வரை, சுகமாகவும் இன்பமாகவம் வாழ்ந்தான். அவன் பொருளடிப்படை வாழ்வியலுக்கு மாறியபோது, குமுகாய (சமூக) ஏற்றத் தாழ்வுகள் உருவானபோது, பகுத்தறிவு என்னும் வழி நின்று, தன் இயல்பின் மாறினான். அப்படி மாறும் வழிகளாக, ஆணவம், சினம், அடக்குமுறை, கூடாவொழுக்கம் என்பன அமைந்தன. அதனால் அவனின் மூலகங்களான ஐம்பூதங்கள் வலிந்தும் மெலிந்துப் மாறுபாடடைந்தன.. அவனுடைய உடலில் ஊழிகளும் பிரளயங்களும் ஏற்பட்டன. முடிவு பிணிகளும் மரணமும். ஆதலால், கூடாவொழுக்கமும் சினமும் இவை போன்றவையும் அறிவியல் வழியாக, ஒருவனுடைய இன்ப வாழ்வையும் வலிய உடலையும் அழிக்குமாதலால், நன்னெறிப்பட்டு வாழ்க! என்பது வள்ளுவர் அறிவுரையாகும்.

அதிகாரம் 30- வாய்மை

தன் நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன் நெஞ்சே தன்னைச் சுடுப்

அதிகாரம் 31 - வெகுளாமை

தன்னைத் தான் காக்கின் சினம் காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினப்

இக்குறள்களும் இன்னும் இவை போன்ற குறள்களும், மனிதனின் நல்வாழ்வு எதில் தங்கியுள்ளது என்பதை வலியுறுத்துவதற்காக பூதவியல்-உடலியல் அடிப்படையில் ஆய்ந்துணர்ந்துபாடடப்பட்டவை என்பதை உணர்ந்து பயன் பெறுக!

*தமிழார்வம் மிக்க என் இனிய தமிழன்பர்களே!*

*உங்கள் கையில் மணம் கமழும் கமலம், தமிழையும் தமிழனையும் தாய்மைப்படுத்த, மறைக்கப்பட்டு விட்ட தமிழினத்தின் மாண்புகளை அனைத்துத் தமிழர்களும் அறிந்து எழுச்சி கொள்ளப் பணி செய்வதையே இலக்காகக் கொண்டுள்ளது. இந்த நற்பணி சிறக்கத் தங்கள் பங்காக, ஆண்டு அறநிதியாக ( நான்கு மலர்களுக்கு) 20 டி.எம் கொடுத்து உதவுங்கள் கமலத்திற்கு. தங்கள் ஆதரவிற்கு நன்றி*

*பணிவன்புடன்--அழலாடி*

*Sparkasse Ibbenbüren. Kon-Nr67514943> BLZ 403 510 60*

## விசுவின் அரட்டை அரங்கம்
## ஒருபார்வை

தமிழகத்திலே பெரும்பான்மை மக்களின் வாழ்க்கைத்தரம் மிகமிகக் கீழே உள்ளதாகச் சொல்கிறார்கள். ஆனாலும் தமிழகத்து மக்கள் தங்கள் அன்றாட வாழ்வில், அத்தியாவசியத் தேவைகளில் முக்கியமான ஒன்றாக, ஒளிநாடகத்(திரைப்படத்)தைக் கொண்டுள்ளார்கள். நல்ல பயன்பாடுள்ள பொழுதுபோக்கிற்காகவும், இலகுவில் மக்கள் மனதில் கருத்துக்களைச் செலுத்தும் ஊடகமாகவும் தொடங்கிய ஒளிநாடகம், மக்களை முற்றாகத் தன்வயப்படுத்தியுள்ளமை, ஒருசமூகச் சீரழிவு. இது போதாது என்று, திண்டுக்கல் லியோனி, ஒளிநாடகத்துறை சார்ந்த பட்டிமன்றம் ஒன்றை நடாத்தி வருகின்றார். இதுபற்றி மறு கமலத்தில் பார்ப்போம்.

மற்றொரு புறத்தில் விசு அரட்டை அரங்கம் ஒன்றை நடாத்தி வருகின்றார். அந்த அரட்டை அரங்கம், நல்ல இனிமையான பொழுது போக்காகத் தான் இருக்கிறது. பாராட்டுகிறேன். எனினும், கூடுமானவரை அறிவுசார்ந்த மக்கள் கூடும் இந்த அரட்டை அரங்கம், தமிழுக்கும் தமிழினத்திற்கும் பயன்படும் வகையில் அமையக்கூடாதா?

எல்லா அரட்டை அரங்கங்களையும் நான் பார்க்கவில்லை. இலக்கியம் — சினிமா — சமுதாயம் பெண்களைப் பெருமைப்படுத்துகிறதா? இல்லைச் சிறுமைப்படுத்துகிறதா என்ற தலைப்பில் நடந்த, சிதம்பரம் அரட்டை அரங்கம் பார்த்தேன்.

ஒரு தங்கை இரண்டாயிரங்களாகத் தான் பெண்கள் இழிவுபடுத்தப் படுகிறார்கள் என்று வாதிட்டார். உண்மை ஆரிய — வேத ஆதிக்கம் ஊடுருவியதால் தான் பெண்ணடிமைத்தனம் உருவாயிற்று. பிற்காலச் சோழர் காலத்தின் பின், சாதியமைப்பின் கொடுமையும், பிராமணன் அல்லாதாருக்குக் கல்வித்தடையும் ஏற்பட்டது. அன்றிலிருந்து தான் தமிழினம் கீழ்மை யடைந்தது. தாயுரிமைச் சமுதாயமான தமிழ்ச் சமுதாயம் பெண்டிமைச் சமுதாயமானது. இந்தக் கருவை அங்கே யாரும் தொட்டுக் காட்டாதது மட்டுமல்ல, பெண்ணழிவிற்கு எந்த வேதம் காரணமாய் இருந்ததோ, அதே வேதத்தைச் சான்றுக்கெடுத்து, பெண் பெருமைப்படுத்தப்படுகின்றாள் என்று, வடமொழிச் சுலோகத்தையும் சொல்லி, ஆங்கிலத்திலும் அன்பு பற்றிப் புரட்டித் தள்ளினார் ஒரு பார்ப்பனப் பெண். ஆங்கிலம் என்கிற மொழி தோன்றுவதற்கு ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய திருக்குறளில் தான், அன்பு பற்றி மிகத் தெளிவாகச் சொல்லப்படுகிறதே. பின் ஏன் அந்த அம்மா அயல் மொழிகளில் விளாசுகிறார். அது மட்டமல்ல, அங்குபேசிய பல கற்றவர்களும்ஆரிய மொழி மாற்று இலக்கியங்களைத் தான் உதாரணம் காட்டினார்கள். ஏன்? தமிழின் தூய இலக்கியங்களை இவர்கள் கற்றதில்லையா?

ஏற்கனவே தமிழில் போதிய சொல்வளம் தற்காலத்திற்கு ஏற்றவாறு இல்லை என்று, தறுதலைத் தமிழர்கள் சிலர் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள். அது போதாது என்று விசுவின் அரட்டை

அரங்கத்தில் தமிழில் சொற்தட்டுப்பாடு போல் பேசினார்கள். மானங்கெட்ட கழுதை என்றால், குற்றமில்லாத அழகிய பெண் என்று பொருள் தரக்கூடிய, முனைவர் ஆராய்ச்சி மாணவர்கள் இருந்தார்கள் அந்த அரங்கத்திலே. முனைவர் முயல்விற்குரிய கற்றோருக்கும், அங்கு கேட்டகப்பட்ட சொற்கள் தெரியவில்லையா? பெண்கள் சிறுமைப் படுத்தப்பட்டாதாகப் பேசிய அன்பர் ஒருவர் விசுவிடம் சில கேள்விகள் கேட்டார். சில பெண்பாலைச் சுட்டும் பெயர்ச்சொற்களுக்கு ஆண்பாற் சொற்கள் கேட்டார். .விசுவினால் பதில் சொல்லமுடியவில்லை. பின்னர் அவரிடம் விசு சில சொற்களைச் கேட்டார். அவருக்கும் பதில் சொல்ல முடியவில்லை. மண்டபம் நிறைந்து வழிகிறது. பல்கலைக்கழக மட்டத்தில் படித்தவர்கள் நிறைந்திருப்பது தெரிகிறது. ஆனால் அந்தச் சொற்களுக்கு எதிர்ப்பதம் காண அவர்களால் முடியவில்லை என்றால், என்ன படித்தவர்கள் இவர்கள்.. விசு சொல்கிறார், இந்தக் கூட்டத்தில் தமிழறிஞர்கள் இருந்தால் அவர்கள் புதிய சொற்கள் கண்டுபிடிப்பார்கள் என்று. ஐயோ! என்ன கொடுமை இது? அட பாவிகளே! புதிய சொற்கள் கண்டபிடிக்குமளவுக்கு, சொற்பஞ்சம் கொண்டதா தமிழ்?

அந்தச் சொற்களுக்கு நாங்கள் எதிர்ச்சொற்கள் தேடுவோம்

விதவை=தபுதாரன், மலடி=மலடன், குத்துவிளக்கு=குலக்கொழுந்து. கைம்பெண்=கைம்மாண்.

அகத்துறைத் தலைமை பெண்ணிடம் இருப்பதால், அவள் குடும்பம் விளங்க உழைப்பவள். இல்லத்திற்கு ஒளி ஏற்றுவது விளக்கு அதனால் அவள் குத்துவிளக்கு. புறத்துறைத் தலைமை ஆணிடம் இருப்பதால் அவன் பல குடுமபங்கள் சேர்ந்த குலம் விளங்க உழைப்பதால் குலக்கொழுந்து.

கைம்மை என்பது பால்படாப் பண்புப்பெயர். ஆணாயினும் பெண்ணாயினும் வாழ்க்கைத் துணையை இழந்திருக்கும் நிலை. வாழ்க்கைத்துணையை இழந்த பெண் கைம்மை+பெண்=கைம்பெண். அப்படியானால், கைம்மை+ஆண்=கைம்மாண் என நாங்கள் துணிந்து கொள்ளலாம். வாழாவெட்டி என்றவுடன் பெண்ணைக் குறிப்பதாகச் கொள்கிறோம். ஆனால் வாளாவெட்டி என்றால் ஆணைக் குறிப்பதாகச் கொள்கிறோம். இது சமூக அமைப்பின் பயானக ஏற்பட்ட மொழி வழக்கே முதலிலும் சொன்னேன் பெண் இல்லறம். வாழ்வறத்தினோடு தொடர்பு டையவள். அந்த வாழ்வறக் கடமைகளை அவள் ஆற்றமுடியாத நிலையில் வாழாவெட்டி. ஆண் பொருளறம் புறக்கடன்களோடு தொடர்புடையவன். அவன் புறக்கடமைகளை ஆற்றாத நிலை வாளாவிருத்தல். அதாவது அவன் வாளாவெட்டி. வாயாடி என்றாலும் அத்தகைத்தே. அவள் ஒரு வாயாடி. அவன் பெரிய வாயாடி. இரு பாலையும் குறிக்கும் சொல்லாகும்.

ஆராய்ச்சி மாணவர் பிலவேந்திரன் திருக்குறளைச் சாடினார். திருடனும் நியாயம் காட்டுகிறானாம், நீதிபதியும் நியாயாம் காட்டுகிறாராம். எல்லாரும் எல்லாத்திற்கும் நியாயம் காட்டத் திருக்குறளை

காட்டுகிறார்களாம். அது தானே குறளின் சிறப்பு. "1330 அரங்குறளும் பாயிரத்தினோடு பயின்றதன் பின் போயொருத்தர் வாய்க்கேட்க நூலுளதோ," என்று தானே வள்ளுவமாலை கூறுகிறது.

திருக்குறள் நுண்மாண் நுழைபுலனுடன் அணுகவேண்டிய நூல். நுனிப்புல் மேய்கிற வழியில் அதைப்படிக்கக்கூடாது. அந்த அரங்கத்தில் வள்ளுவன் பெண்களைத் தாழ்த்துகிறான் என்று வாதிட்டார்கள். அதற்கு வாழ்க்கைத் துணைநலம் — பெண்வழிச்றேல் என்ற இரண்டு அதிகாரங்களைச் சொல்லி வாதிட்டார்கள் இங்கு மட்டுமல்ல, பலமேடைகளிலும் ஏடுகளிலும் இது பேசப்படுகிறது. ஆனால் வாழ்க்கைத் துணைநலம் அறத்துப்பாலிலும், பெண்வழிச்சேறல் பொருட்பாலிலும் வருவது பற்றி இவர்கள் எண்ணிப் பார்த்ததே இல்லை. பெண்களைப் பற்றிப் பேசும் இரண்டு அதிகாரங்களையும் வெவ்வேறு இடத்தில் ஏன் வைத்தான் வள்ளுவன்.

இல்லறம் இல்வாழ்வு என்பது அறவழிப்பட்டு, கருத்தொருமித்து, ஒருயிராகி வாழும் வாழ்க்கை. இனிய மனைவியும் சான்றோனான கணவனும் தான் இங்கே பேசப்படுவார்கள். இந்த இல்லறத்திற்கு வெளியேயும், சின்ன வீடு முதல், பரத்தையர் வீடு வரை ஆணும், பணத்திற்காகவும் அடங்காக் காமத்தினால் ஆடவரைத் தேடிச்சுகம் காணும் பெண்களும் உலகில் காணப்படுகிறார்கள். இது சித்தம் அழகியதான இனிய காதலின்பத்திற்கு — அகத்திற்கு எதிரானது. அகத்துறையேயல்ல. அகத்திற்கு வெளியே, இல்லறத்திற்கு வெளியே இருப்பதால் தான் பொருட்பாலில் வைத்தார். இல்லத்துள்ளும் காமத்தாலும் காரியங்களாலும் அடங்காப் பெண்ணின் சொற்கேட்டு, தவறான வழி ஒழுகின் அது அவனது புறக்கடைமைகளை செய்யாது தடைசெய்யும். அதுமட்டமல்ல பெண்ணின்பம் என்னும் இன்பமே கதியென, விட்டு விட்டுப் பல லீலைகள் செய்தும் — — மேனிதனை விடலின்றி இட்டுப் பல முத்தம் இட்டுப் பல முத்தம் இட்டுச் இடைவிடாது மனைவிழைந்து மாண்பயன் மறக்கும் சுப்பிரமணியக் கவிஞனைப் போன்ற, புறக்கடமைகளை காமத்தில் மறக்கின்ற பேதையரைப் பார்த்துச் சொன்னதால் தான், இவ்வதிகாரம் பொருட்பாலில் சொல்லப்பட்டது. தவிர இல்லறத்திற்குரிய இனிய பெண்களை இவ்வதிகாரம் தொட்டுப் பேசவில்லை என்பதைத் தெளிக. அறத்திலே அவர் கண்டது பெருத்தக்க பெண்ணை. புறத்திலே அவர்கண்டது. பொய்மை மகளிரை, இந்தப் பொய்மை மகளிர் உலகம் முழுவதிலும் எல்லாச் சமூகத்திலும் நிறைந்து கிடக்கிறார்கள். இதை எந்தச் சகோதரியாவது மறுத்துரைக்க முடியுமா? முடியாதே. அப்படியிருக்க வள்ளுவன் பெண்களை வஞ்சித்தான் என்று மடைத்தனமாகப் புலம்பித்திரியலாமா?

இறுதியாக இந்த அரங்கில் பங்குபற்றியவர்களுக்கும், பார்வை யாளர்களுக்கும் நான் ஒன்று சொல்வேன். காட்டிலும் பாருங்கள் நாட்டிலும் பாருங்கள். தோற்றம் — குரல் — உடலமைவு இவற்றில், பெண்மை மென்மையும் இனிமையும் கொண்டதாகவும், ஆண்மை வன்மையும்

வலிவும் கொண்டதாகவும் அமைகிறது. கத்தும் ஓசையைக் கொண்டே, பசு — எருது, மறி — கடா, சேவல் — பேடு என்று பெண் — ஆண் என்று அடையாளம் காண்கிறோம்.

பிணை நீரருந்திக் கரைசேரும் வரை கலைமான் தான் நீரருந்தாது பிணையைக் காத்து நின்று, பின்னரே தான் நீரருந்தும். காட்டகத்தில் ஆனைக்கூட்டங்களைக் காணில் ஒருவலிய கொம்பன் களிறு, செம்மாந்து தலைமை தாங்கிச் செல்லும். எருது இழுக்கும் பாரவண்டியைப் பசுவினால் இழுக்கமுடியவில்லை. ஆனால் அங்கே மெலிவும் வலிவும் இணைந்து ஏற்றத் தாழ்வு காணாது வாழ்கின்றன. பெண் அடிமை அங்கில்லை. காரணம் என்ன? பகுத்தறிவிற்குள் மனிதன் வந்தபின், தனித்து வாழவும், தனக்கென வாழவும், முனைந்ததால் பொருள் முதலிடம் பெற்றது. பொருளாதார இடைவெளி ஏற்பட்டது. இந்நிலையில் ஆரியப் பண்பாட்டுப் படையெடுப்பு நடந்தபின் தமிழினத்தின் தாய் வழி உரிமை மாற்றப்பட்டு, தந்தைவழி புகுந்ததால் தான், பெண் அடிமைத்தனம் புகுந்தது சங்ககாலம் வரைஆண்மையும் பெண்மையும் ஏற்றத் தாழ்வின்றி இருந்தமையை, இலக்கியங்கள் காட்டுகின்றன. அந்த ஆரியச்சேறு தான் இன்றும் தமிழினத்தை மூடி நிற்கிறது. இதனைப் பார்ப்பாரும் உணர்ந்து திருந்தவேண்டும். தமிழரும் உணர்ந்து திருத்தவேண்டும்

## தமிழ் இலக்கணம் கூறும் நால்வகைட் பெயர்ச்சொற்கள் யாவை?

தொல்காப்பியப் பெருநூல் தமிழ் நால்வகைட் பெயர்ச்சொற்களை உடையது எனக்கூறும்.

அவை, இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்பனவாகும்.

இயற்சொல்- செந்தமிழ் நாட்டில் வழங்கும் சொற்களாகி, பொருளை மாறுபடாது உணர்த்தும் சொற்களாகும்.

திரிசொல்- ஒரு பொருளை உணர்த்தும் பல சொற்களும், பலபொருளை உணர்த்தும் ஒரு சொல்லும் ஆகிய சொற்களாகும்.

திசைச்சொல்- சூத்திரம்--"செந்தமிழ் சேர்ந்த-பன்னிரு நிலத்துப்
தம்குறிப்பினவே திசைச்சொற் கிளவி"

செந்தமிழ் வழங்கும் நாட்டுடன் சேர்ந்த, பன்னிருநாடுகளிலிருந்து, செந்தமிழ் குறித்த பொருளைக் குறித்தசொல் சேய்மை காரண மாகத் திரிந்தமொழிகளின் சொற்கள். உதாரணம் தென்மொழிகள்

வடசொல்- வடமொழிக்குரிய சிறப்பெழுத்தல்லாமல், வடமொழி-தென்மொழி இரண்டிற்குமுரிய, பொதுவான சொல்லால் அமைந்து தமிழில் வழங்கும் சொற்கள். என்று தொல்காப்பிய உரைகள் கூறுகின்றன. திசைச்சொல் என்பது தமிழ் சேர்ந்த நிலத்துள்ள திரிந்த மொழிகளின் சொற்கள் என்றபின், தமிழுக்குப்

வடமொழிக்கும் பொதுவான சொல்- என்றொர் சொல் எப்படி வர முடியும், தமிழ் சேர்ந்த என்றுதான் வரமுடியும். ஆகவே, தமிழோடு சேர்ந்த வடமொழியும் திசைச்சொல்லே. அன்றி ஒரு தனிவகைச் சொல்லாக இடம்பெற முடியாது.

அது மட்டுமல்ல, நிலந்தரு திருவிற் பாண்டியன் முதல் ஊழிக்கு முற்பட்டவன். அதாவது வடவர் நாவலந்தீவினுள் கால் வைப்பதற்கு ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவன்.அவனுடைய காலத்தில் எழுந்த நூலில், வடசொல் என்றொருசொல் இடப் பெறவே முடியாது. தொல்காப்பியம் பிறந்த காலத்தில் அப்படி யொரு மொழியே உலகத்தில் கிடையாது.

பாயிரத்தில் நக்கீரனார், இடை-கடைச் சங்கத்தாருக்கு நூலாயிற்று தொல்காப்பியம் எனக் கூறியுள்ளார். எனவே, தொல்காப்பியம் முதற்சங்க நூலாயிற்று. எனவே, ஆத்திரே லியாவும்-ஆப்பிரிக்கமும்-பாரசீகமும் ஒன்றாக இருந்த குமரிச் கண்டத்தில் எழுந்த நூல். அதிலே குறிக்கப்பட்டுள்ள பன்னிரு நிலங்கள், கடைச்சங்கத்துப் பனம்பாரனார் கூறும், "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" என்ற சுருங்கிய பிற்காலத்துத் தமிழகத்து எல்லைகளைச் சார்ந்ததல்ல. பன்னிரு நாடு என்று இன்று, பொங்கர்நாடு, ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, வடதலைநாடு என்று, இன்றைய சுருங்கிய தமிழகத்தைச் சார்ந்து சொல்லப்படுகிறது. நூல் எழுந்த காலத்துக் குமரிக்கண்டப் பரந்த தமிழகத்தை அடிப்படை யாகச் கொண்டு, இந்தப் பன்னிரு நாடுகளும் கணக்கிடப்படின், உலகப் முழுவதும் அதனுள் அடங்கும். அதை அறியமுடியாதவர்கள் அறிந்த அளவுக்குள் அடக்கிக் கொண்டு தவறுகளை எழுதி யுள்ளார்கள். சீதநாடு நீர்மிகுந்த நாடாக இருத்தல் வேண்டும். பூழிநாடு பாலைநிலமாக இருத்தல் வேண்டும். தென்பாண்டி என்பது அழிந்த குமரியாக இருத்தல் வேண்டும். எனவே, பண்டைத் தமிழகம் உலகின் முக்காற் பகுதிக்கும் மேலான நிலப் பகுதிகளைக் கொண்டதே. எனவே, வடசொல் என்றொரு சொல்வகை தமிழில் இல்லவேயில்லை. அல்லாமலுப் தொல்காப்பியத்தைப் பின்பற்றிய கடைச்சங்க நூல்கள், எப்படிச் தொல்காப்பிவழி வடவெழுத்துக்களையும், வடசொற்களையுப் தம்முள் தாராளமாகக் கொண்டிராமல், தூய தமிழ்வழி நின்றன? ஆகவே, கடைச்சங்கத்திற்கும் பிற்பட்ட காலத்தில் தொல்காப்பியத்துள் வெட்டி ஒட்டி ஊடுருவல் செய்யப்பட்டது

என்பது புலனாகின்றது. பிற்காலச் சோழர் காலத்தில் பிராமணர் அல்லாதாருக்குக் கல்வி மறுக்கப்பட்டிருந்ததையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

திசைச்சொல் என்றொரு சொல் இருக்க, வடசொல் என்றொரு வகை இருப்பது தவறாகும். வடசொல்லும் திசைச் சொல்லே, இது புகுத்தப்பட்ட சதியாகும் என்று சில தமிழ் அறிஞர்கள் சில வருடங்களுக்கு முன்பு, விவாதித்தது பற்றிச் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் ஒரு முடிவைத் தரவில்லை. விவாதித்ததுடன் நின்றுவிட்டது.

இன்று தமிழகத்திலும் சரி, வேறு தமிழர் வாழும் இடங்களிலும் சரி, பேராசிரியர்களும், முனைவர்களும், புலவர் களும் நிறைந்து கிடக்கிறார்களே, ஏன் தமிழகத்திலே வீதிகள் தோறும் பள்ளிகள் இருக்கின்றனவோ இல்லையோ, வீதிகள் தோறும் முனைவர்களும் முதுகலைவாணர்களும் நிறைந்து கிடக்கிறார்களே, இவர்களெல்லாம், இந்தச் சதிகள் பற்றி ஆக்க பூர்வமாகச் சிந்தித்துச் செயற்படாமல் என்ன செய்து கொண்டி ருக்கிறார்கள். திருத்தமுடியாது என்கிறார்களா? திருத்தினால் அரசு ஏற்றுக்கொள்ளாது என்கிறார்களா? இருந்தது போல் இருந்துவிட்டுப் போகட்டுமே என்கிறார்களா? மானமுள்ள போராட்டம். பெரியார் ஈ.வெ.ராவுடன் போய்விட்டதா? சாலை இளந்திரையன் போன்ற வேழங்கள் (யானைகள்) தோன்றியுப் தமிழினம் சிந்திக்க மறுக்கிறதே! ஐயோ தமிழினமே! உன்னைச் காப்பாற்றுவது யார்?

என் இனிய தமிழகத்தின் இளஞ்சிங்கங்களே! ஆதிசிவன் பெற்றுவிட்டான் ஆரியமைந்தன் அகத்தியன் என்றோர் வேதியன் கண்டு மகிழ்ந்து எழில்மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்" என்று தமிழ் தோன்றிய காலத்தை மறைக்கக் கரடி விட்ட பார்ப்பாரச் சுப்பிரமணியனை உயர்த்தும், தமிழகத்துப் பார்ப்பாரப் பல்கலைக்கழகங்களை நம்பிக் கொண்டிராமல், நீங்களே தமிழ்ப் புரட்சிக்கு வித்திடுங்கள். என் எண்ணத்தை இதில் நான் உங்களுக்குச் சொல்வேன்.

தொல்காப்பியம் கூறும் "கடிசொல் இல்லைக் காலத்துப் படினே" என்று. காலந்தோறும் விளையும் மாற்றங்கள், புதிய தோற்றங்கள், புதிய புதிய சொற்களை ஒரு மொழிக்குள் கொண்டு வரும். அப்படி வருதல் தவறல்ல என்பது பொருள். ஏறக்குறைய இரண்டாயிரங்களுக்கு முன்பு எழுந்த சங்க இலக்கியங்களில் இருக்கும் சொற்கள், பெரும் பாலானவை

அருஞ்சொற்களாகி வருகின்றன. பெரும் பாலானவை நடைமுறையில் இன்றில்லை. ஆனால் தமிழில் இருக்கின்றன. இன்றிருக்கும் ஏராளமான சொற்கள் அன்று இருந்ததில்லை. ஆனால் சொற்குறித்த பொருள் அன்றும் இருந்தது. இன்றும் இருக்கிறது. அப்பொருள் குறித்த சொல் காலத்திற்கு ஏற்ப மாறுபாடடைந்து வருகிறது. அண்ணா காலத்தில் அத்தான் என்றொரு அழகு தமிழ்ச்சொல் பிறந்து குமுகாயத்தை முற்றாக ஆட்கொண்டது. புதிய அறிவியற் பரம்பலின் பின், புதிய பொருட்களின் தோற்றத்தால், புதிய நாகரீகங்களின் கலப்பால், சொல்நயமும்-பொருட்செறிவும் கொண்ட சொற்கள், ஏராளமாக திசைச் சொற்களாக அல்லாமல், தமிழில் தோன்றின. இப்படி உருவாகி வரும் சொற்கள், இயற்சொல்-திரிசொல்-திசைச்சொல் என்னும் வகைக்குள் அடங்கா.

எனவே, காலத்திற்கேற்ப வரும் சொற்களைத் தமிழ் ஏற்கும் என்று கூறிய தொல்காப்பியம், அப்படி வரும் சொற்கள் எந்த வகைக்குள் அடங்கும் என்று வரைவிலக்கணம் தராமலா விட்டிருக்கும்.

காலத்துப் படின்- படின் என்பது, படுதல் என்னும் தொழிற்பெயரின், எதிர்கால வினைமுற்று. படுதல் என்பது வந்தடைதல்.

புள்படுதல்-புட்படுதல் என்பது, புன்செய்களில் தானியங் கனைக் கவரப் பறவைகள் வந்டைதல்--நெய்தலில் உணங்கலைச் (கருவாடு) கவரப் பறவைகள் வந்தடைதல். எனவே, படின் என்றால் வந்தடைதல் என்று பொருள்படும். எனவே காலத்துப் படும் சொற்கள் வந்தடையும் சொற்களாகும். வந்ததடையுப் சொற்களைச் சொல்வகைப் படுத்தின் "வருசொல்" எனப்படுப்

இந்த வருசொல் தான் தமிழின் கன்னித்தன்மை ஆகும். மொழியின் இளமையைக்காத்து நிற்கும் சொல் ஆகும்.

வடமொழியும், இலத்தீனும், கிரேக்கமும், எபிரேயமுப் போன்ற, மிகப்பழமையும், இலக்கிய வளமும் கொண்ட மொழிகளெல்லாம் அழிந்துபட, இந்த மொழிகளுக்கெல்லாப் மிகப்பழைமையாபனதும், அனைத்துக்கும் ஆதிமூலமான தமிழ்மொழி, என்றும் அழியா இளமையுடன் இன்றும் நின்று நிலவுவதன் ஒரே இரகசியம், இந்த வருசொல் தான். காலத்திற்கு ஏற்பப் புதிய சொற்கள் பிறப்பதைத் தமிழ் ஏற்கிறது. இலக்கணவழியால் மட்டுமல்ல, அதனுடைய எதற்கும் இளகிச் கொடுக்கும் இயற்கை ஒலி அமைவாலும் ஏற்க முடிகிறது.

தமிழ்மொழி வலிந்து ஒலியமைத்துச் சமைத்த,வடமொழி, ஐரோப்பியமொழிகள் போன்றதல்ல, அது இயற்கையின் ஒலிகளில் பிறந்த மொழி. அதனால் காலத்தால் படுப் சொற்களை இடரின்றி ஏற்கிறது.

சிலப்பதிகாரம் நெஞ்சையள்ளும். அன்றும் அள்ளியது. இன்றும் அள்ளுகிறது. ஆனால் அது இன்றைய தமிழில் இல்லை. அதைப் படித்து இன்புற உரையாசிரியர் வேண்டும். கம்பன் காலத்துக்காவியங்கள் அதைவிட இலகு தமிழில் பிறந்தன. மீனாட்சிசுந்தரம், சுப்பிரமணியக்கவிஞன் போன்றோரின் நடை இன்னும் இலகுவாயிற்று. அண்ணா, சேதுப்பிள்ளை போன்றோரின் நடை இன்னும் இலகுவும் சுவையும் பெற்று மக்களிடம் நன்றாக இடம்பிடித்தது. இன்று சாலை இளந்திரையனின் உரைவீச்சுத் தமிழ் இளம் உள்ளங்களை நிரப்பும் வேகம் கொண்டது. இன்னும் புதுக்கவிதைகள்-புதுப்புதுப் படைப்புகள், சொல்நயம்- பொருள் வேறுபட்டுக் கொண்டே பிறந்து காலத்திற்கு ஏற்பத் தமிழின் இளமையைப் பேணி வருகின்றன. அற்றைத் தமிழும் இற்றைத் தமிழும் இணைந்து செழுமையடைகின்றன. இந்தச் செழுமைக்கு- இந்த இளமைக்கு உயிரூட்டமாய் இருப்பது காலத்துப்படும் "வருசொல்" தான். எனவே, தமிழின் நால்வகைப் பெயர்ச்சொற்கள், இயற்சொல்- திரிசொல்-திசைச்சொல்-வருசொல் என்றாகும் வருசொல் என்ற சொல்லின் ரு வை அகற்றிவிட்டு, அவ்விடத்தில் ட வைச் சேர்ப்பது வடவனுக்கு இலகுவாயிற்று. புறத்தில் ஒரு பாடலில் "குரவர்த் தப்பிய கொடியோர்" என்ற வரியை "பார்ப்பார்த் தப்பிய கொடியோர்" என்று மூலத்தையே சாமிநாதஐயர் என்ற பார்ப்பார் மாற்றியதைச் சாலை இளந்திரையன் கண்டறிந்து எழுதினார். ஒரு எழுத்தை மாற்றுவதா பெரிய வேலை? மாற்றிவிட்டான். வருசொல் வடசொல் ஆயிற்று. வடசொல்லானது மட்டுமல்ல, எச்சவியல் சூத்திரம் 6: "சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்" என்று கூறுகிறது. சூத்திரத்துள் சூத்திரம் விட்ட பாாப்பான் அதுவும் போதாது என்று, தமிழின் தூய்மையை அழித்து, வடமொழியால் மூடிவிட, 6ம் சூத்திரத்தையும் புகுத்தினான்: எனத் தோன்றுகிறது.

சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்- தமிழுக்குப் வடமொழிக்கும் பொது எழுத்தால் வந்த சொல்லேயன்றி, வடவெழுத்தாலேயே அமைந்த சொல் சிதைவுபட்டு வரினும், பொருந்தின் நீக்கார். பார்ப்பாரச் சூழ்ச்சித்திறன் தான்என்னே! ஒலி மாத்திரையில் இருந்து, குறிலும் நெடிலும்- அளபெடையும்,

மொழிமுதல் எழுத்து- புணர்ச்சி என்று மொழியியலின் சகல துறைகளாலும் நுணுகி ஆராய்ந்து, இது இப்படித் தான் என்று இலக்கண வரம்பிடப்பட்ட தமிழ்மொழியில், வடமொழி நுழையும் இடத்தில் மட்டும் வேலியும் இல்லை, வரம்பும் இல்லை. சிதைந்து வரினும் ஏற்றுக் கொள்ளலாம். தொல்காப்பியத்தில் அத்தனை இயல்களிலும் வராத வடசொல் நுழைப்பு, எச்சவியல் என்னும் குறைநிரப்பல் பகுதியில் இடம்பெற்றுள்ளது என்றால்:, தமிழறிஞர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

அன்புத் தமிழகத்து இளந்தமிழா! நீ கற்ற கல்வியாவது இனித் தமிழைக் காக்கட்டும். என் கருத்தை எண்ணிப் பார்த்து, உங்கள் ஆய்வுத் திறனால் இதைவிடவும் உயர்ந்த உண்மைகளைக் கண்டறிந்து, இந்த விடயத்தில் மட்டுமல்ல, தொல்காப்பியம் முழுவதையம் சீரமைக்கவும், வடமொழி ஆதிக்கத்தைத் தகர்க்கவும் பாடுபடுங்கள்.

திராவிடக்காரர்கள் திராவிடத்தைக் காக்கப் புறப்பட்டு, ஆட்சிக் கதிரைகளுக்காக பார்ப்பாரக் காவலர்களாகி விட்டார்கள். ஈருருளியில் விளக்கில்லாமல் சென்றவனுக்கு 200 ரூபா தண்டம். ஈருருளியைக் களவெடுத்த ஏழைக்கு 6 மாதக் கடுங்காவல். ஆனால், ஆயிரம் இலக்கம் கோடிகளைக் திருடிய ஒருத்தி வெளியில் நின்று சவாலுக்குச் சவால் என்று ஆட்டப் போட வீட்டிருக்கிறது தமிழகம். பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுகிற திராவிடக்காரர்கள் தமிழைச் காக்கமாட்டார்கள். தம்மைக் காப்பார்கள். எனவே, நீங்கள் புறப்பட்டுப் புதுப்பாதை போடவேண்டும் தமிழ்ப் போருக்கு என்று கேட்டுக்கொள்கிறேன்.

கமலக் கனலில் கனன்றவர்கள்.

மிகவும் தோழமையுடன் மதிப்பிற்குரிய அழலாடி ஐயா

அவர்கட்கு1

முதற்கண் 99% தங்களுடைய பார்வைகள் அனைத்திலும் எனக்கு உடன்பாடே.- பார்ப்பனியம் குறித்த(பாரதி/சுப்பிரமணியன் உட்பட)தமிழின் மேன்மை குறித்த அக்கறை.

- தனித்தமிழ்ச் சொற்களுக்கான தங்களின் தேட்டம்- வடவர் ஆதிக்கம் குறித்த கவலை. இன்ன பிற எல்லாவற்றிலும் உடன்பாடே.

நீங்கள் ஒவ்வோர் ஆய்விற்கு உரிய தலைப்புகளைச் கட்டுரையாக எழுதி விடுகின்றீர்கள்.

எங்கள் ஈழத்தமிழருக்கு வடவர், பார்ப்பனீயம், சைவத்தினை விழுங்க முயலும் இந்துத்தவம். வடமொழியின் தமிழ் விழுங்கிக் கொள்கை முதலியவற்றைச் சொல்லலாமா? சொன்னால் செவி மடுப்பார்களா? பல்கலைக்கழகங்களில் இருக்கும் கண்மூடிப் பால் குடிக்கும் உருத்திராட்சப் பார்ப்பனீய ஆதரவுப் பூனைகளுக்கு எப்படி இதைச் சொல்வது, என்றெல்லாம் நான் எனது நண்பர்களுடனும், டெல்லிப் பல்கலைக்கழகத்திலும், தமிழ்நாட்டிலும் புலம்பித் திரிந்திருக்கிறேன்.

சேர்மனியில் எங்கோ ஒரு மூலையில், மிக்க செயல் திட்டங்களும்- சொன்னால் பிறர் கேட்கக்கூடிய அனுபவ வயதிலும், தற்செயலாக உங்களைப் பார்த்ததும் மகிழ்வை விட ஆச்சரியமே எனக்கு.

ஏலவே எனக்கு இயங்கிக்கொண்டிருக்கும் சில சிற்றிதழ்களுடன் நெருங்கிய தொடர்புண்டு. அவற்றைக் கொண்டு உங்கள் இதழைப் பரவலாக்கம் செய்யலாம். பல மக்களைப் போய்ச் சேரவேண்டிய கருத்துக்கள் கமலத்தில் நிறைய உண்டு. தமிழகத்தில் ஒருவர் சிற்றிதழ்களைச் சேர்த்து ஆவணப்படுத்து கின்றார். அவரிடம் தங்கள் இதழினை அனுப்பி வரலாற்றில் இதனைப் பதிவு செய்தல் அவசியம்.

அப்துல் ரகூப் பற்றிய தங்களின் பார்வையில் கூட எனக்கு மகிழ்வே. அம்மறவனின் மறைவு அன்று நானும் கூட ஒரு கவிதையைப் பதிவு செய்தேன்.

முதலில் உங்கள் இதழ்களை டெல்லித் தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு அனுப்புவோம். நான் தங்களை நேரில் சந்திக்கும்போது இன்னும் பல ஆக்கபூர்வமான விடயங்கபைப் பேசுவோம்.

என் ஏட்டுப் படிப்பு நாட்டார் வழக்கியல். ஆர்வப் தமிழியல், மொழியியல், இலக்கியம் கலை.

என்னை யாரென்று தெரிகின்றதா? புதுவருடத்தன்று தங்கள் காரின் கலங்கள் செயலிழந்தவன்று, வந்திருந்தேன்.

அன்புடன்

ச. வின்சென்ற்

முதுகலைவாணன் (M.A) நாட்டுப்புறவியல்

ஆரிய இராமாயணத்தை தமிழினத்துள் புகுத்தி, சான்றோனாய், மாவீரனாய், மாமேதையாய் அன்று உலகமுழுதாண்ட இராவணன் அரக்கனாய், இழிந்தவனாய் காட்டினான வடவன். உண்மை இராவணனை கண்டறிய "இராவணகாவியம்" படியுங்கள்

K.Jeyakumar
Ponanda Goundanur
Thondamuthur (P.O) Pollachi(T.K)
C.B.E-642123 Tamilnadu
India.

தமிழனுக்கு தலைவணங்குகிறேன்
அன்புடையீர்!

என் பெயர் செயக்குமார். தமிழின் மீது தணியாத தாகமும், தீராத மோகமும் கொண்டவன். ஆனால் இன்றைய தமிழகம் தமிழைத் தவிர, பெரும்பாலும் ஆங்கிலம் பிறமொழிகள் கலந்து, தமிங்கிலமாகிவிட்டது. தூயதமிழ் நூல்கள் மிகவும் அரிதாகி விட்ட நிலையில், சேர்மனியில் இருந்து மலர்ந்து விட்ட "கமலம்" தூயதமிழ் இதழ் கண்டு வியந்துவிட்டேன். இதுபோல் ஒரு இதழை இதுவரை நான் பார்த்ததே கிடையாது. பிறகு படிப்பது எப்படி? இதயமே இல்லாத தமிழருக்கு, இன்பத்தமிழை ஊட்டி, தட்டி எழுப்ப மலர்ந்து விட்ட கமலத்திற்கு, என் கோடானு கோடி வணக்கங்கள். பரதநாடு முழுவதும் தென்னவன் ஆண்டது தான். ஆனால், சிந்துவெளியில் எழுத்தை வைப்பதற்குப் பதிலாகச் சட்டியையும் பானையையும் வைத்து விட்டான். வருங்காலத்தில் தமிழகத்திற்கும் இந்நிலை என்றால், ஐயோ! என் செய்வேன். தமிழ் எங்கள் உயிருக்கு நேர் அல்ல, எங்கள் உயிர் என்று கூறுகிறவன் தமிழகத்தில் இருந்தால், அவன்தான் தமிழகத்தில் வாழப் பிறந்தவன். தமிழ் மண்ணை ஆளப்பிறந்தவன்..

கமலம் இதழை ஒருவரிடம் இருந்து படித்தேன் அச்சிறு நேரத்துள் என்னுள் எழுந்த அடக்க முடியா மனக்குமுறலை என்ன என்பது? தமிழா! எங்கே தொலைந்து போனாய்? தமிழா! தமிழா! நீ பேசுவது தமிழா!!!

கமலம் இதழ் எனக்குக் கண்டிப்பாக வேண்டும்! வேண்டும்! எனவே கமலம் முதல் இதழை அனுப்புக. என் உயிர் உள்ளவரை கமலம் இதழைப் படித்தே தீரவேண்டும்.

தமிழன் என்று சொல்லடா! தலை நிமிர்ந்த நில்லடா!
நான் ஆரியனை அடிவருடவில்லை. தமிழனுக்கு தலை வணங்குகிறேன்.

இங்ஙனம்
தமிழன் செயக்குமார்

பற்றி எரிகிறதே!வயிறு

::::பெற்ற வயிறு பற்றீ எரிகிறது என்பார்கள். ஆனால் ஆண்மகனான எனக்குப் பற்றி எரிவதேன்? பெற்ற வயிறு பத்து மாதம் சுமந்து உயிரூட்டி உலகுக்குத் தந்த, உயிர்ப்பின் காரணமாக, ஊன் கலப்பின் காரணமாக, தன் பிள்ளைக்கு தீங்கு நிகழ்ந்தாலோ, பிள்ளை தனக்குத் தீங்கிழைத்தாலோ, அதைத் தாங்கமுடியாமல் தவிப்பது இயல்பு. ஆனால், என் வயிறு எரிவது என்னைப் பெற்றெடுத்த தமிழினம், சிந்தனையற்று இருப்பது கண்டு, தன் தனித்துவத்தை இழப்பது கண்டு, எப்படி வாழ்ந்தால் என்ன என்று பணத்துக்காய் நாய்களாய் வாழ்வது கண்டு, விழிப்படைய வேண்டிய மேலைநாட்டுச் சூழலிலும் மடமையுள் ஆழ்வது கண்டு, எப்படிக் காப்பாற்றுவேன் என் இனத்தை என்று, என் வயிறு பற்றி எரிகின்றது.

:::::::கற்பென்னும் திண்மை பெரிதாகப் பேசப்பட்ட தமிழினத்தின் தாய்க்குலம், தன் தாய்மண் எல்லையைத் தாண்டியவுடன், கற்பென்றால் என்ன? அது யாருக்கு வேண்டும். பெண் தான் விரும்பியபடி வாழலாம், விரும்பினால் ஆண் அடங்கிப் போ! இல்லையேல் விலகிப் போ! தவறின் நான் போகிறேன் என்கிற அளவுக்குத் துணிந்திருக்கிறது. ஐரோப்பாவில், ஒரு பெண் எப்படியும் வாழலாம், எத்தனை ஆடவருடனும் வாழலாம் ஆனால் அவர்களுடன் எந்த ஆணும், எந்தக் கணவனும் கண்டிக்க முடியாது என்கிற, மேற்குலகச் சட்டத்தை, பொருத்தமில்லாத ஆசியக் குடும்ப வாழ்வுக்குள் கொண்டு வந்து சிரழிந்து, சீரழிக்கிறது.

அன்புக்கும் பண்புக்கும், அழகிய சித்தத்திற்குப் சொந்தமான இனிய தமிழ்ப்பெண்களை, அந்த வணக்கத்திற்குரிய உத்தமிகளைப் பற்றி இங்கு நான் சொல்லவில்லை. தமிழீழ த்திற்கு வெளியே வந்தவர்களில் எதற்கும் துணிந்தவிட்ட, ஒரு பத்து வீகிதப் பெண்களையே சொல்கின்றேன்.

மிகமிக அண்மையில் இரண்டு வேதனை தருப் சம்பவங்கள் கமலத்தை நாடி வந்தன. மனைவி சேர்மனிக்கு வந்து ஓராண்டாகிறது. கணவன் இடைவழியில், வந்து சேர முடியாமல் திணறிக்கொண்டிருக்கிறார். இந்நிலையில் இந்தப் பெண்ணைக் காணவில்லை ஒரு வாரத்தின் பின் பெண் மீண்டும் வருகிறார் ஒன்றும் தெரியாதது மாதிரி. ஆனால் ஒரு ஆடவனுடன் தலை மறைவானது பற்றி, ஆடவனின் குடும்பமே அவளையப் சேர்த்துத் தேடிற்று

இன்னுமொரு வேதனை தரும் சம்பவம் உள்ளத்தை உருக்கும்சம்பவம். 5 மாதங்களுக்கு முன்பு, 36 வயதுடைய, சேர்மனியில் நல்ல தொழில் பார்க்கின்ற ஒருவருக்கு, திருமணப் பேசி முற்றாகி, அவர் பொறுப்புறதி அளித்து, பெண்ணைச் கூப்பிட்டார். அந்தப் பெண் வந்ததும் அவசரப்படுத்தி திருமணத்தை முடிப்பித்தார். திருமணம் முடிந்ததும் அவரின் மனைவி ஆதலால், அந்தப் பெண்ணுக்கு நிரந்தர வாழ்விட அனுமதி கிடைத்தது. கிடைத்த மூன்றாம் நாள், அவள் தலைமறைவாகிவிட்டாள். தொலைத்தொடர்பு சீட்டைப் பார்த்தால் அவள், எங்கெங்கெல்லாமோ பேசியிருக்கிறாள். தன் காதலனை வந்தடைய, ஒரு நல்ல அப்பாவி இளைஞனைக் திருமணமுடித்து, அவனின் செலவில் வெளிநாடு வந்து, விசாக் கிடைக்கும் வரை அவனுடன் கட்டிலில் காதல் புரிந்துவிட்டு, கிடைத்ததும் காற்றாய் பறந்துவிட்டாள். .அந்த அப்பாவிக் கணவன்அவளுக்காக உருகிச் கொண்டிருக்கிறான். இப்படி ஏராளம் ஏராளம் சம்பவங்கள், என்னே என் தமிழ்த் தாய்க்குலமே! தாய்நாட்டுச் சமூகக் கட்டு இல்லையென்றதும் பண்பும், கற்பும் பெறுமதியற்றுப் போய்விட்டதா? இந்தப் பெண்ணுடன் வாழ முனைகிற ஆண் வெட்கங்கெட்ட கழுதை என்று சொல்வேன்.

::::::இலங்கையில் வாழ்ந்த காலத்திலும் இந்தத் தமிழர்கள் யெகோவா வரை எல்லாக் கிறீத்தவ மதங்களையும் கண்டவர்கள் தான், கொச்சிக்கடை மாதாகோவிலுக்கும் பாசையூர்அந்தோனியர் கோவிலுக்கும், பாலைதீவுக்கும் போய் இறைவணக்கம் செய்த வர்கள் தான் இந்தத் தமிழர்கள். ஆனால் அவர்கள் சமய வேறுபாடு காட்டவில்லை. ஐரோப்பா வந்ததும், தாங்கள் உண்மையான கடவுளைக் கண்டறியாமல், இவ்வளவு நாளும் காட்டுமிராண்டித் தனமான கடவுள்களை வணங்கி வந்திரு க்கிறோம். இப்போது தான் உண்மையான சீவிக்கிற தேவனைச் கண்டோம், என்று மதம்மாறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தேவனைக் கண்டார்களோ இல்லையோ காசைக் காணுகிறார்கள் இறைதுரோகிகள். ஆண்டவன் உண்மையாக இருக்கிறான் என்றால் இவர்களைச் சபித்தே தீருவான்.இன்னும் கொஞ்சம், நாங்கள் இந்துக்கள், எங்கள் பாரம்பரியங்களை விடாமல் பாதுகாக்க வேண்டும். நாங்கள் சைவசமயிகள், எங்களுடைய சமயத்தை நாங்கள் விடாமல் பின்பற்றவேண்டும் என்று சொல்கிறார்கள். போற்றப்பட வேண்டிய விடயம். ஆனால் அதுகள் பின்பற்றுகிற முறை தான் வேதனை தருகிறது.

விரதங்கள், உபவாசம் வெள்ளி செவ்வாய் என்று புனிதமாக சைவஉணவு உண்டு, நல்லது. ஆனால், ஐயோ மடையா! உன் பணத்திமிரா அல்லது மடமையின் நம்பிக்கையா? விரதத்திற்கு வாழையிலை விண்ணுந்நில் வருகிறது. ஐயோ கடவுளே! என்னென்பேன்! வாழையிலையில் சாப்பிட்டால் தான் கடவுள் உன்விரதத்தை ஏற்றுக் கொள்வாரா? மடைச் சாம்பிராணிகளே! ஏன் பணத்தை வீணடிக்கிறீர்கள் நிலைவெள்ளிப் (எவர்சில்வர்) பாத்திரங்களில் சாப்பிடக்கூடாதா? கூடாதென்றால் கந்தர் சட்டி கவசம் என்னும் நோன்புக்கு பால்மட்டும் ஆறு நாட்கள் அருந்துகிறாயே அந்தப் பால் பேணியில் தானே குடிக்கிறாய் அதேபேணி ஆன உலோகத்தில் சாப்பிடக் கூடாதா? ஒருவன் கடவுளைத் தேடி மதப் மாறுகின்றான், இன்னொருவன் ஐரோப்பாவில் வாழையிலையில் கடவுளைத் தேடுகிறான். இந்தக் கேடுகெட்ட தமிழ்ச் சாதியைக் காப்பாற்றுவது யார்?

இளைய தலைமுறை, இலகுவில் சூழல் காரணமாகத் தமிழை விட்டுவருகிற சூழலில், நற்சிந்தனைகளாக புனித வேதாகமம் ஓதப்படுகிறபோது, ஏழைகளுக்காகவும் எளியவர் களுக்காகவும் இறைவனை மன்றாடுகிற கிறீத்தவச் சூழலில், சைவநற்சிந்தனைகளைச் சொல்லிக் கொடுக்காமல், பிராமணியும் அந்தணனும் கூலிபேசிச் சமயச் சடங்கைச் செய்வதைக் குழந்தைகள் காணும்நிலையில், ஐயரும் பட்டு பக்தர்களும் பட்டாக ஆடம்பரமாக ஆண்டவன் வாசலில் நிற்கிற பக்திக்குப் புறம்பான சூழலில், ஆருக்கும் புரியாத ஆற்றையோ மொழியில் பிராமணி புலம்ப, பிள்ளைகள் விளங்காமல் அதனால் அதன் வயப்படாமல் நிற்கையில், அடிநாள் தொட்டே ஆரியப் பார்ப்பார் ஆயத்தம் பண்ணி வைத்திருக்கிற ஆபாசத் தேவாரங்கள்-- பெரும்பைம் புனத்தினுள் சிற்றேனல் காக்கின்ற பேதை கொங்கையை முருகன் விரும்பினதை, (பிடி-பெண்யானை. கரி-ஆண்யானை) பிடி அதன் உரு உமை கொள்ள, மிகு கரியதன் வடிவு கொண்டு பிள்ளையாரைப் பெற்றதை, பையரவு அல்குள் பாவையர் ஆடும் பாச்சிலாச்சிரமத்தை ( பையரவு அல்குல்-பாம்பின் படம் போன் அகன்ற பெரிய பெண்குறி) பற்றி, உருகி உருகி நல்ல தமிழில் பாடினால் இறைபக்தி, பண்பு எங்கே காப்பாற்றப்படப்போகிறது. இளைஞர்கள்எதிர்ப்பாலாரைத் திரும்பிப் பார்ப்பார்களா? ஆண்டவனைத் துதிப்பார்களா? இதையெண்ணி என் வயிறு பற்றி எரிகின்றது!.

:::::::வாழ்க்கயில் திருமணம் என்பது ஒரு தடவை. வாழ்வின்

எல்லையில்லா இன்பநாள். (அது ஒரு சிலருக்கு மட்டும் தான்) அதைச் சரியோ பிழையோ, ஒரு சாபக்கேடு வராமல் சரியாகச் செய்ய வேண்டும். அம்மி மிதித்து அருந்ததி பார்த்து, அருந்ததி எந்தப் பக்கத்தில் நிற்கும் என்று ஐயனுக்கும் தெரியாது, ஒன்பது கும்பம் வைத்து, ஓமகுண்டம் வைத்து, அந்த மண்டபம் எல்லாம் புகையால் நிறைத்து, இறை நம்பிக்கையோடு பிசகில்ல்மல் நடக்கும். ஐயன் 600 கேட்க, என்ன முந்தி 300 தானே எடுக்கிறனீங்கள் என்று மாப்பிள்ளை சொல்ல, இப்ப சாமான் எல்லாம் என்ன விலை விற்குது என்று தெரியாமல் கதைக்கிறியள் என்று ஐயர் சொல்ல, சரி இந்தாங்கோ 500, அதை வாங்கிக்கோண்டு, 500 தாரான் தரித்திரம் பிடிச்சவன் என்று மன,துள் திட்டிக் கொண்டு போக, நீ நல்லாய் இருப்பாயா? அதுவும் போகட்டும் ஐயர் போன மறுகணமே, முட்டைக் கேச் வெட்டி மதுபானம் அருந்தி கொண்டாட்டம் தொடரும்: ஐயோ தமிழா! மடையா! நீ விரும்பிறபடியெல்லாம் கொண்டாடு அது தவறில்லை. அதுக்கேன் அம்பிட்டவனுக்கு எல்லாம் மடையனாய் உன் காசை அள்ளிக் கொட்டுகிறாய். இப்படிச் செய்வதால் தானே இறை கருணை இல்லாமல் எத்தனை எத்தனை திருமணர்கள் ஓரிரு வருடங்களிலேயே ஆளை ஆள் கொலை செய்கின்றனர்.

::::::::மனித சுதந்திரம் மனிதனை அழிக்கிற அளவுக்கு, கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள மேற்கு,லகில் வாழ்ந்தும், உலகப் போக்கைப் புரிந்து கொள்ளாமல், வெறும் பணப்பெருக்கால், உயர்ந்துவிட நினைக்கிற போலிக்குள் தள்ளுண்டு, தன் ஆட்டத்தினால் தன் பரம்பரை அழியப்போவதை மறந்து நிற்கிற எம்மினத்தை எண்ண என் வயிறு பற்றி எரிகிறதே! ஆரிடப் சொல்லி அழுவேன்? யாரிடம் போய் முறையிடுவேன்? என் இனிய தமிழினமே! எண்ணிப் பார் என் வேதனையை, எண்ணிப் பார்த்துத் நல்வழி வரமாட்டாயா? கைகூப்பி மன்றாடுகிறேன்.

**கமலத்தின் நோக்குடைய தூயதமிழ்ப் புரட்சிச் சிந்தனைகள், பண்டை இலக்கியங்கள் மீதான புதிய ஆய்வுகள், தமிழின் உண்மை உயர்வினைக் காட்டும் கட்டுரைகள், குழுகாயப் புரட்டுகளுக்கு எதிரான எண்ணப்பதிவுகள் வரவேற்கப்படும். எழுதுங்கள் தமிழ்கூறும் நல்லுலகம் பயன்பெற.......**

தமிழால் தமிழுக்குள் தமிழனைத் தேடுவோம்.

20.09.97 ல் அன்று, டென்மார்க்கில் எழுச்சித் தமிழ் விழாவில்
" தூக்கம் கலையட்டும்" பாட்டு மன்றில்
அழலாடி

என் அன்னைக்கு! அவையோர்க்கு!
பாவலர்க்கு! பாத்தலைவன் ஆதவர்க்கு!
என் வணக்கம்.

மோட்டுத் தமிழ்ச்சாதி கேட்டுத் திருந்துமென்று
பாட்டெழுதிப் பாடுபட்டு பலவூரும் சுற்றிவந்து
நாட்டுக்கு நாடு சென்று நயம்படவே சொல்லிவந்து
பாட்டெழுதிப் பாடுபட்டேன் பட்டென்ன பயனுண்டா?

வள்ளுவன் தொட்டு நேற்று சாலையார் வரையும் நல்ல
தெள்ளுதமிழ் புலவர் பலர் சொல்லித்தான் பார்த்தார்கள்.
கேட்டு மகிழ்ந்திடுவார், விழாவெடுப்பார் பாவலர்க்கு
பாட்டென்ன பொருளென்ன மறந்திடுவார் மறுநாட்காலை
வெல்லக் குறள்நெறியை, வீரத்தமிழ்ப் பாட்டை
எல்லாம் மறந்திடுவார். எங்கெல்லாம் தமிழ் அழிக்க
பொல்லாதார் பாடினரோ போற்றிடுவார் நாளுமதை.

ஆண்டிரண்டாயிரமாய் அன்று தொட்டு இன்றுவரை
பரிமேலழகன் முதல் பாரதிப் பார்ப்பான் வரை
தமிழாலே பாட்டெழுதி தமிழாலே உரைதந்து
தமிழினத்தைத் தாழ்த்துதற்கு தக்கவழி செய்து சென்றார்.
பொய்யும் புளுகும் பொல்லாப் புனைசுருட்டுப்
மெய்மைத் தமிழ் நெறியாய் மேதினியில் காட்டி வந்தார்.
ஐயா தமிழ்ப் புலவர்களே! ஆய்ந்து நீர் பார்த்ததுண்டா?
பொய்யை உடைத்துப் புது நெறியைக் காட்டுதற்கு,
எண்ணிநீர் பார்த்ததுண்டா எடுத்துரைப்பீர் துணிவிருந்தால்.
பெண்ணாசைப் பேய் வடவர் இராமன் கதை போற்றுகிறீர்.
ஐவருக்கு ஒரு பெண்டில் அப்பாரதத்தைப் போற்றுகிறீர்
ஐயோ தமிழகத்து அறிவுகெட்ட அறிஞர்களே!
கன்னித் தமிழ் காவியங்கள் கற்றதுண்டா தமிழகத்தான்.
முத்தமிழ் காவலர்கள் மூத்தபெருங் கவிக்கோக்கள்
எத்தனைபேர் தமிழ் காக்க உலகவலம் வருகின்றீர்.
உம்வீட்டில் தமிழுண்டா? உம்மூரில் தமிழுண்டா?
ஊரேய்க்கும் கள்ளர்களே! உமையழிப்பேன் என்பாட்டால்.

சாமித்தொழில் செய்வதற்கு சாதியொன்று இவ்வுலகில்
வேற்றினத்தில் கண்டதுண்டா? வேதமொழி சமக்கிருதப்
ஆசாமிப் பார்ப்பாரின் ஆயுதமாய், உன் மந்திரமாய்.
ஏமாற்றி வாழ்வதனை எண்ணி நீர் பார்த்ததுண்டா?
தமிழ் கேளாக் கடவுளேன்? தமிழனுக்கு எண்ணிடுவீர்.
அப்பரும் சுந்தரரும் அருட்பிரகாச வள்ளலாரும்.
தமிழோடிசை பாடித்தான் தழைக்க வைத்தார் சைவத்தை
எப்படி நீ உனையிழந்தாய் ஏமாற்றும் கூட்டத்துள்--எட தமிழா?
ஒட்டுமொழிச் சமக்கிருதம் வேண்டுமா எண்ணிப்பார்!
சாதிமுறை வேதமதம் வேண்டுமா எண்ணிப்பார்!
பார்ப்பாரின் பொய்மொழிகள் வேண்டுமா எண்ணிப்பார்?
வேண்டாம் இனித்தூக்கம் விரைந்தெழடாதமிழ்மகனே!

தாய்மண்ணாம் தமிழகத்தில் தமிழறிஞர் கூட்டமொன்று
தமிழை மறந்துவிட்டார் தாம் வாழ்ந்தால் போதுமென்று.
விழிகண் குருடர்களே! என்தமிழால் ஊமையழிப்பேன்
தக்கவழி வந்திடுக! தமிழுக்காய் வாழ்வதற்கு! --(மு.கு கீழே)

அகதித் தமிழா! அன்பாலே கூறுகின்றேன்
வசதியுள்ள அகதி நீ! வந்தவழி மறந்துவிட்டாய்.
தாய்மண்ணில் தமிழ்மக்கள் படும் துயரை நினைத்ததுண்டா?
ஏய் தமிழா! மறந்தவனை எதிர்காலம் தண்டிக்கும்

பாலில்லைத் தாய் முலையில் பசியால் குழந்தையழும்
சேய்முகத்தைக் கண்டு தாய் கண்கள் குளமாகும்
நோய்க்கும் மருந்தில்லை நொந்து மனம் வாடுகையில்
குண்டுவிழும் உடல் சிதறிக் குடும்பமே அமைதிபெறும்
எடேந்திப் பள்ளி சென்ற எழிலிக்கு வயதாறு
வீடேகி மீளவில்லை வீதியெல்லாம் தேடிவரின்
சிங்கத்தின் வழிவந்த சிங்களத்தின் நாய்ப்படைகள்
சீரழித்து என் மகளைச் சிதைத்துச் சுவைத்திருந்தார்.
கட்டழகுக் காளையவன் கண்டாலே பசி தீரும்,
பட்டணம் போனவனாம் பார்த்தவர்கள் யாருமில்லை,
சேற்றுக் குளத்தடியில் சேறாகிக் கிடந்தானாம்
சோற்றுத்துருத்திகளே! சொல்லுங்கள். விதி இதுவா தமிழனுக்கு?
அழகுத் தமிழ்ச்செல்வங்கள் அன்னையர்கள் கரங்களிலே
அள்ளி அணைத்திடவே ஆசை துளிர்த்துவர,

மெள்ளப் பெயர் கேட்டேன். மேனி அதிர்ந்ததடா!
ஐயோ! டெனிஸ்ராஜ் டெனிசா சகீத் யயித் என்றார்
தன்னைத் தன் பெயரை தான் மறந்த சாதியொன்று,
என்சாதி! தமிழ்ச்சாதி! ஏனையா இக்கொடுமை?
அழகுத் தமிழாலே அன்புக் குழந்தைகட்கு
பழகிக் களிப்பதற்குப் பெயர் சூட்டமாட்டீரா?

ஊரில் உன் ஆட்கள், உடுக்கைக்கும் உணவுக்கும்,
உலைந்தால் உனக்கென்ன, உலுத்தனாய் வாழுகின்றாய்
பட்டுக்கும் பவுனுக்கும் கொட்டுகிறாய் பணத்தை அள்ளி
பொட்டுச்சிரட்டைக்கும் போய்க்கடையில் நிற்கின்றாய்.

பார்ப்பாரும் ஏய்ப்பாரும் படித்தசில கள்ளர்களும்
கண்ணைக் குருடாக்கியுன் கருத்தை இருட்டாக்கி
மூளைக்கு விலங்கிட்டு மூடிவிட்டார் மாயைகளால்
மீளமுடியாமல் தூங்கிவிட்டாய் இன்றுவரை

பாடவல்லார் இன்றுனக்குப் பாடுகின்றோம் கேட்டு நீ
எண்ணித் தெளிந்துள்ளம் தூக்கம் கலைந்துவிடு!
கண்ணைத் திற! காணுலகை! கருத்துத் தெளிவு பெறு!
தமிழீழம் மட்டுமல்ல தமிழகமும் மீண்டுவிடுப்

தூக்கம் கலையட்டும் துடித்தெழு நீ!
போக்கு இனத்துயரை, போராடும் மாமறவர்,
புலிகள் படையணிக்கும், புனர்வாழ்வு பேணுதற்கும்,
அள்ளி வழங்குங்கள். அன்னை தமிழ் வாழவைப்பாள்.
புலவன் நானுனக்குப் புத்தி சொல்லப் பாட்டெடுத்தேன்
புலவன் என்நாவில் புரள்வாள் தமிழ் அவளோ!
பொல்லாள். பெருங்கோபங் கொள்வாள். எச்சரித்தேன்.
தூக்கம் கலையட்டும்! துடித்தெழு! என் தமிழோடு.

( சபையில் முன்னால் அமர்ந்திருந்த தமிழகத்து அறிஞர் முனைவர். இரா.சனார்த்தனன் அவர்களிடம், ஐயா சனார்த்தனன் அவர்களே! என் தூதுவராக என்பாட்டைத் தமிழகத்தாருக்கு கொண்டு சென்று சொல்க, என்று அழலாடியால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது)

## கண் ஏன் எனக்குக் கடவுளே!

மன்றல் ஒன்றுக்கு மணமக்கள் அழைப்பிட்டார்.
சென்றவர்க்கு வாழ்த்துச் சொல்லிவரச் சென்றிருந்தேன்.
மன்றலர்கள் மணவறையில் மங்கலமாய் வீற்றிருந்தார்.
என் தமிழர் முகம்பார்க்க ஆவலுடன் கண்விட்டேன்,
ஐந்தகவைப் பெண்ணாள் அழகு முகம் பல கண்டேன்,
பொங்கும் கன்னிமையின் பூமுகங்கள் பலகண்டேன்,
அங்கம் பொலிந்த அன்னையரின் முகங்கண்டேன்.
பொங்கும் உள்ளப் பூரிப்பில் நான் மிதந்து,
எங்கும் எழில் வழியும் இன்பத்துள் மூழ்கையிலே,
என்னைப்பார் என்றுசில இடைகள் அழைப்பிடவே,
அன்னையரின் அடிமரத்து அழகிடையைக் கண்காண,
உள்ளம் வெடித்து உதிரம் பெருகிற்று.
மன்றேறும் நாடக மாதர்தம் இடையினிலும்,
மன்றலின் தலைமகளின் ஒடியும் இடையினிலும,
இன்றுவரை கண்ட, இழையொன்று ஒட்டியாணம்,
சென்றரங் கேறிச் சதிராட்டம் ஆடுவதைக்,
அன்றுநான் கண்டேன். அகதிகளின் மனக்கொழுப்பைச்
கண்டழுவா? கண் ஏன் எனக்குக் கடவுளே!

சதந்திரப் போராட்டத்தின் பெயரால் அனைத்திந்திய ஒருமைப்பாடுஎன்ற கோட்பாட்டுக்குள் தள்ளுண்ட தென்னிந்திய நாடுகளின் தலைவர்கள், குறிப்பாக இந்தியாவிலேயே தலைசிறந்த இனமான தமிழினத் தலைவர்கள், தமிழ்நாடு என்ற நாட்டெல்லையை இழந்து, மாநில எல்லைக்குள் அடங்கினார்கள். இந்த அடக்கத்தைக் கட்டிக்காத்து, இந்திக்குள் அடகுவைக்கக் காந்தீயம் என்ற போலிக் கோட்பாட்டை மிகைப்படுத்தினார்கள். புரிந்து கொள்ளாத தமிழகத்தின்பெரும்பான்மை மண்டூகங்கள், ஆகா! ஓகோ! என்று ஏற்றுக்கொண்டார்கள். மறு புறத்தால் சங்கராச்சாரிய மடங்கள், சமயத்தின் பெயரால், மக்களை ஏமாற்றி, சாதி வேண்டும், வேத முறைக்கல்வி வேண்டும், சமக்கிருதக் கல்வி வேண்டும், மைம்பெண் முறை பேணப்பட வேண்டும் என்று, தமிழுணர்வு மீண்டுவிடாமல் தமிழர்களைத் தொடர்ந்தும் அடக்கிவைக்க முயல்கின்றன. இந்த இரண்டையும் எதிர்த்துத் தமிழைக் காக்கத் தமிழன் இல்லை. ஆனால் தமிழகத்தில் ஆரியத்தைப் பரப்ப, தமிழைத் தாழ்த்தத் தமிழன் இருக்கிறான் மடங்களில் அடுத்த கமலத்தில் இவ்விடயங்கள் பற்றி ஆராயப்படும்.

முதல்வரை முற்றுகையிடல் என்றொரு செய்தியை நாளிதழ்களில் கண்டு, தமிழகத்து உடன்பிறப்புகளின் விழிப்புணர்வு கண்ட மகிழ்வால் கமலம் கனல்கிறது. அதனால் இறுமாப்பு அடைகிறேன். ஆனால், இதுவா தமிழன் நிலை என்ற இழிதகவால் தலை குனிகிறேன்.

நான் தமிழன். தமிழனாய்ப் பிறப்பதே தனிப்பெருமை தானே. முன்தோன்றி மூத்து, பல்லினம் பெருக்கி, உலகப் படைப்பை உறுதிப்படுத்தி, கருத்தும் மனநலமும் வளர இயைகின்ற இயற்கையினூடாக தமிழ் என்னும் மொழி தந்து, உலகெங்கும் நீக்கமறக் கலந்து நிற்கின்ற, தமிழினத்தின் ஒரு குடிமகனாய் பிறப்பது பெருமைதானே.

கி.பி 10,11ம் நூற்றாண்டுகளில் மதுவிலும் மாதரிலும் மூழ்கிக் கிடந்த பிற்காலச் சோழர்கள் உலகை வென்றதாகச் சொன்னாலும், ஆரியத்தை வளப்படத்தி தமிழினத்தின் தனித்துவத்தை அழித்தது தான் உண்மை. அதன் பின் அகப்பட்டவனுக்கெல்லாம் அடிமையாய் உழைப்பதைத் தவிர வேறொன்றும் அறியானாய், புல்லாய்ப் பூடாய் புழுவாய் நலிந்து கிடந்தான் தமிழன. ஏறத்தாழ 50 ஆண்டுகளின். முன் உலகப் அனைத்துலகக் கொள்கைக்குள் அகப்பட்டுக் கொண்டபின், தோன்றிய தமிழறிஞர்கள் வேற்றுமையில் ஒற்றுமை காணப்புறப்பட்டு, புதிய இந்தியத்துள் புதைந்தார்கள் தமிழனை. ஈ.வெ.ரா பெரியார் தோற்றுவித்த விழிப்புணர்ச்சி பொங்கியெழுந்தது., அதைப் பரப்பியவர்கள் இடைவழியில் தம்மை மறந்து போனார்கள்

காலத்திற்குக் காலம் மேடைகளில், தமிழ் முழங்கி, தமிழகத்தின் ஆட்சிக் கதிரையில் ஆட்கள் மாறினார்களே தவிர, தமிழகத்தின் தலைவிதி கடந்த ஐம்பது ஆண்டகளாக மாறவேயில்லை.

ஆரியத்தால் பண்பாட்டு அடிப்படையில் சீரழிக்கப்பட்டு தன் அடையாளத்தை இழந்து நிற்கிற தமிழகம், தற்போது அரகியலாலும் அழிக்கப்படுகிறது. தமிழகத்து அரசியலில், திராவிடத்தால் வளர்ந்த, தமிழ்பேசும் அன்னியப் பார்ப்பாரின் ஆதிக்கம் கொடிகட்டிப் பறக்கிறது.

தமிழ் தமிழ் என்று ஓலமிட்ட, கலைஞரான கருணாநிதியின் எழுத்துக்களால் தமிழறிவு பெற்றவன் நான். ஆனால், 1936ல் கல்லக்குடியில், அன்னியமொழிப் பெயர்ப்பலகை

அழிக்கும் போராட்டம் நடாத்திய கருணாநிதி 1998 லும் அதைத்தான் நடத்திக்கொண்டிருக்கிறார். இதுதான் திராவிடப் தமிழுக்குச் செய்த தொண்டு

திராவிடம் ஆட்சி ஏறப்பயன்பட்ட ஒளிநாடகம்(சினிமா) தமிழகத்தை முற்றாக ஆட்கொண்டு கிடக்கிறது. அதன்மூலப் பார்ப்பாரக் கொச்சைத்தமிழ், ஒழுங்காகத் தமிழகத்துட் பேச்சுவழக்கினுள் குடியேறி வருகிறது.

தமிழ்நலன் காக்க தமிழ்நலத்துறை அமைச்சு அமைக்கட் பட்ட பின்னும் தமிழகத்தில், ஏறத்தாழ முப்பதாயிரத்திற்கு மேல் ஆங்கிலத்தையும் இந்தியையும் பயிற்று மொழியாகக் கொண்ட ஆரம்பப்பாடசாலைகள் இருக்கின்றனவே வெட்கக்கேடு. இந்த வெட்கக்கேட்டை எப்படித் தமிழகம் தாங்கிக் கிடந்தது. சாலை இளந்திரையன் போன்ற வேழங்களின் பிளிறல் கேட்டும், மக்கள் தூங்கிக் கிடந்தார்கள்.

தமிழீழவிடுதலைப் போராட்டம் உலகத்தமிழினத்தை, தலை நிமிர வைத்திருக்கிற இந்த நற்பொழுதில், தமிழகத்தின் ஐம்பத்துமூன்று தமிழியக்கங்கள் ஒன்று சேர்ந்து, தமிழைப் பயிற்று மொழியாகவும், ஆட்சிமொழியாகவும் உடன் கொண்டு வருமாறு, முதல்வரை முற்றுகையிடப் புறப்பட்டிருப்பது நல்ல அறிகுறி--பெருஞ்செயல்.

ஆனால் கூடிக்கலைந்து போய், பின் மறந்துவிடாமல் காரியம் முடிகின்ற வரை போராட்டம் தொடரவேண்டும். குண்டாந் தடியடிக்கும், கம்பிக் கதவுகளுக்கும் அஞ்சாமல் போராட்டப் தொடரவேண்டும்.. தன் நாட்டில் தன்மொழியில் கற்பதற்கும். தன்னைத் தன்மொழியில் ஆள்வதற்கும் போராடவேண்டிய கேவலத்தை மக்களுக்கு உறைக்கும் வண்ணம் எடுத்துரைத்து, இதற்காகத் தமிழகம் முழுவதும் பொங்கியெழச் செய்யவேண்டும்.

ஈழத்தீவிலே சிங்களவெறியனான பண்டாரநாயக்கா என்பவன் 1956 ல் இருபத்துநான்கு மணி நேரத்தில், எங்குப் எதிலும் தனிச் சிங்களம் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தான், அதிலும் இரண்டு மொழிகள் பேசுகின்ற மூன்று இனங்கள் வாழுகின்ற நாட்டில். இரண்டு மொழியினங்கள் வாழ்கிற மண்ணில் 24 மணிநேரத்தில் ஓரினம் தன்மொழி மட்டுமே அரசமொழி என்றாக்கமுடியும் என்றால், தமிழன் வாழ்கிற தமிழ் மண்ணில் 24மணி நேரத்தில் ஏன் தமிழை ஆட்சி மொழியாக்கமுடியாது.

உலகிலுள்ள எந்தமொழியையும் எவனும் படிக்கலாம்,

அது நன்றே! ஆனால் வேற்றுமொழி மூலமான பாடசாலைகள் அவசியமில்லை. இந்த விந்தை, உலகிலேயே தமிழகத்தில் மட்டும் தான் உண்டு. அரிச்சுவடி முதல் ஆராய்ச்சிப் படிப்பு வரை எல்லாம் தமிழில் கற்பிக்கப்படல் வேண்டும். நான் வாழுகிற சேர்மனி தேசத்தைப் போன்று, முதன்மொழி தாய்மொழி--சேர்மானிய மொழி, அதனுடன் வேறு மூன்று மொழிகளை ஒரு மாணவன் கற்கலாம். 5ம் வகுப்பில் ஒருமொழி. ஏழாம்வகுப்பில் ஒருமொழி. ஒன்பதாம் வகுப்பில் ஒருமொழி, என்று விருப்,ப ஒழுங்கின்படி படிக்கலாம். இவ்வகையில் தமிழகத்து மாணவர்கள் பிறமொழிகளைக் கற்கலாம். எனவே உடனே பிறமொழிட் பாடசாலைகளை, தமிழ்மொழிப் பாடசாலைகளாக்குமாறு கட்டளையிடுமாறும். அதற்குப் போதிய தமிழாசிரியர்கள் இல்லாவிடில், அரசு முயன்று அதைச் சீர்செய்ய வேண்டுப் என்றும், தமிழாசிரிய பயிற்சிக் கலாசாலைகளை நாடெங்குப் ஆரம்பிக்குமாறும் போராடுவதோடு, ஆங்கிலவழிக் கல்வியைத் தொடர முயலும் தனியார் கல்வி நிறுவனங்களைத் தடைசெய்யுமாறும் போராடுங்கள்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலை வேண்டும். இதில் அரசு முனைப்புடன் இறங்கும் போது, தமிழ்பேசுப் அன்னியங்களிடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பாவண்ணம், இந்த இயக்கங்கள் நாடெங்கும் மக்கள் மனதில் பதியும் வண்ணப் தனித்தமிழ்க்கல்வி, தமிழ் ஆடசி மொழிபற்றி பிரச்சாரப் செய்யவேண்டும்.

தாய்மொழி என்பது ஒரு உயிருணர்வு. அந்த உயிருணர்வு இழக்கப்படும் போது இனம் அழிந்தபடும். இதை மக்கள் மனதில் ஊட்டி இப்போராட்டத்தை மக்கள் போராட்டமாக மாற்றவேண்டுகிறேன்.

1993ல் பேர்லின் நகரில் நடைபெற்ற பன்னாட்டுத் தமிழுறவு மன்ற மாநாட்டில், நான் கலைஞருக்கு ஒரு வேண்டுகோள் விட்டேன் அன்று இன்றைய தமிழ்நலத்துறை அமைச்சர் தமிழ்க்குடிமகனும் அந்த அரங்கில் இருந்தார். கலைஞர் அவர்களே! 50 ஆண்டுகளுக்கு முன்பு நீங்கள் தமிழுக்காய் வாழ்ந்து உலகத்தமிழர் மனதில் நிறைந்திருந்தீர்கள். இன்றோ ஆட்சிக் கதிரைகளுக்காக முடி வீழ்ந்தவுடன் இழந்து போகின்ற புகழுக்காக தமிழை விடாதீர்கள் வள்ளுவன் போல் இளங்கோவைப்போல், வீழ்ந்துவிடாது என்றுப் சாகாவாழ்வு பெற, இன்றே தமிழுக்காக வாழ வாருங்கள். என்று

வேண்டினேன். அந்த வேண்டுகோளை இன்றும் கலைஞர் முன் வைக்கின்றேன். கலைஞர் அவர்களே! தமிழை ஆட்சிமொழியாகவும் கல்விமொழியாகவும் மாற்றி இறவாட் புகழுபெற்றுயர இந்தக் கணமே புறப்படுக!

அறுநூறு வருடங்களுக்கு ஒருமுறை தமிழ் தலையை நிமிர்த்தி ஆட்சிபீடம் ஏறும், அந்த ஒழுங்கின் நாள் இந்த நாள்தான். தமிழ் மீண்டும் ஆட்சிபீடம் ஏறும் நாள் இது, என்று, உங்கள் மூத்தவர்களில் ஒரவரான பா.உ.ஆதித்தனார் எடுதியதை உங்களுக்கு ஞாகப்படுத்த விரும்புகின்றேன் தமிழ் ஆட்சிபிடப் ஏறப்போவது திண்ணம். தமிழகத்தைப் பொறுத்தவரையில் அந்தப்புகழ் உங்களுக்காகட்டும்! வெல்க போராட்டம்!

விரைவில் முழுங்கவிருக்கிறது
"தமிழ்முழக்கம்"
உலகில் தமிழர்கள் வாழும் ஐம்பதுக்கு மேற்பட்ட நாடுகளைத் தொடர்புபடுத்தி, உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கவும், உலகத் தமிழர் செய்திகளைப் பரப்பவும், உலகெங்கும் சிதறிக்கிடந்து தமிழை மறந்து வரும் தமிழர்களிடையே தமிழ்க் கல்வியைப் பரப்பவும், புதிய தூயதமிழச் சிந்தனைகளை வளர்க்கவும், ஆரியவேத மாயையைகளில் புதையுண்டு கிடக்கும் தமிழினத்தை, சங்கத்தமிழ் — குறள்நெறிவழி மீட்டெடுக்கவும், உலகத்தமிழ்ட் பண்பாட்டு இயக்க ஐரோப்பிய ஒன்றியத்தினால் வெளியிடப்பட விருக்கிறது தமிழ்முழக்கம் திங்களேடு இந்தச் சீரிய முயல்வில் பங்கு கொள்ள விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி
தமிழ்முழக்கம்
K.T.Ganfsalinkam
Riegel str 26
48431. Rheine--Germany

*சங்கே முழங்கு! சங்கே முழங்கு! பொங்கிவரும் தமிழ்வீரம் பகையுடைத்துத் தமிழீழம் காணுமென்று, சங்கே முழங்கு!*

அண்ணா வழி

கம்பரசப்

ஆரியச்சதியின் கருவியான இராமாயணம எப்படித் தமிழனை ஏமாற்றியது, அந்த ஆபாசக் கதையைத் தமிழன் பாராயணம் பண்ணுகிற வேதனையை -அநியாயத்தை நீங்களப் கண்டறிய அண்ணாவழி கம்பரசம் தரப்படுகின்றது.

சீதையின் மேலிடத்தைச் சிரமம் பாராமல் வாணித்த இராமரின் மோகத்தைக் காட்டும் பாடல், இன்னொரு வேறிடத்தில் அவரது விழி வண்ணத்தைக் காட்டுகிறது. சித்திரகூடப் பருவச் செய்யுளைப் படித்த பிறகு, சீ! சீ! கடவுள் அவதாரம் எடுத்தது இந்த ஆபாசப் பேச்சுக்களுக்கா என்று சிந்தித்திருப்பீர்கள். நான் இனிக் கூறப்போகும் மற்றப் பாடலைப் படித்தபிறகு, அடேடே சொல் மட்டுமல்ல செயலும் மோசம் தான் என்று கூறுவீர்கள்

இராமரின் கை வண்ணத்தால் தாடகை மாண்டதையும், கால் வண்ணத்தால் களவாக இந்திரனுடன் கூடிய கௌதம முனிவரின் பத்தினி மீண்டதையும் விசுவாமித்திரர் கண்டு வியந்தாராமே, அதன் பின் நடந்தது. புலவர்கள் பூரிப்போடு கூறுவர், இராமரும் சீதையும் ஒருவரையொருவர் சந்தித்த காட்சியை, கம்பர் வர்ணித்ததை, கம்பர் அதிலே குறளை இழைத்துள்ளார் என்று கூறி மகிழ்வர்.

கண்ணோடு கண் கலந்த காட்சி, ஆகா! ஆகா! என்பர் உண்மைதான். அது காட்சி இன்பம் தான் ஆனால் இராமனின் கண் செய்த மற்றோர் வேலையை மட்டும் அவாகள் கூறுவதில்லை. கூறினால் அவர் குணம் வெளியாகிவிடும், பகவானின் செயல் மைனரின் செயல் போலல்லவா தோன்றும்.

பாலகாண்டத்தில், மிதிலைக் காட்சிப்படலத்தில், 35ம், 36ம் பாடல்களில் அவர்கள் கூறிக்களிக்கும் பாடல் 35..

கணர்ணொடு கண்ணினைக் கவ்வி ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்.

இராமரின் கண் சீதையின் கண்ணையும், சீதையின் கண் இராமரின் கண்ணையும் கவ்விற்றாம். இருவருக்கும் ஏககாலத்தில் ஒருமித்த உணர்வு ஏற்பட்டதால், இருவர் உள்ளமும் ஒன்றியது.. ஐயனும் நோக்கினான் அம்மையும் நோக்கினாள். இது நல்ல காட்சி. இன்பம் மிக்கது தான்.

ஆனால் அவர்கள் சொல்லாமல் மறைத்த 36வது பாடல், இராமரின் விழி சீதையின் விழியைக் கவ்வியதோடு நில்லாது, வேறு வேலையில் ஈடுபட்டதைக் காட்டுகிறது. தெருச்சுற்றுப்

தறுதலையின் வேலைதான் அது. மன்னன் மகன், விட்ணுவின் அவதாரம் அவருடைய கண் செய்த வேலை.?

நோக்கிய நோக்கெனும் நுதிகொள் வேலிணை
யாக்கை மதுகையான் தோளில் ஆழ்ந்தன
வீக்கிய கணைகழல் வீரன் செங்கணுத்
தாக்கணங் கனையவள் தனத்தின் தைத்தவே.

நோக்கிய நோக்கெனும்-சீதை பார்த்த பார்வையான, நுதிகொள் வேலிணை-கூர்மையான இரண்டு வேல்கள், யாக்கை மதுகையான்-வலிமை வாய்ந்த உடலையுடைய இராமனது, தோளில் ஆழ்ந்தன-புயங்களிலே அழுந்தின. இது சீதையின் கண்கள். தன்னைக் கண்டும் காணச் செய்தும் மகிழ்வூட்டிய இராமனது தோள்களில் தங்கின. இது முறை. இராமனின் கண்கள் என்ன செய்தன? சீதையின் செந்தாமரை முகத்தில் தங்கினவா! இல்லை.

மீதிப்பாடலின் பொருளைப் பாருங்கள். வீக்கிய கணைகழல் வீரன்-வீரக்கழல்கள் அணிந்திருக்கிற இராமனின், செங்கணும்-சிவந்த கண்களும், தாக்கணங்கு அனையவள்-மோகினி என்னும் பெண் தெய்வத்தை ஒத்த சீதையின், தனத்திற் தைத்தவே-கொங்கைகளில் பாய்ந்து சென்று தாக்கின. எப்படி இருக்கிறது அண்ணலின் கண். இனிக் காளையருக்குக் கவலை என்ன? கடவுளுக்கே கன்னியரைக் கண்டதும் கண்கள் தனத்தில் தைத்திடுமாமே, உணர்வுகளால் ஆட்டுவிக்கப்படும் நாங்கள் எப்படிச் செய்தால் என்ன? என எண்ணாமலா விடுவார்கள்?

மன்னனே இந்நிலையில் இருந்ததால் தான் அயோத்தியின் மதுகை மைந்தர்கள், மாதரின் மறைவிடம் தெரியுமா! தரிசனம் கிடைக்குமா! என்று தவித்தார்கள், என்று கம்பர் கூறியுள்ளார்..

கடவுள் ரசம் கடுகத்தனையும் காணமுடியாத, இக்காம ரசத்தைத்தான், கலாரசிகர்கள் என்கிற ஆரியதாசப் பிண்டங்கள், விடமாட்டோம் என்கிறார்கள்.

கம்பதாசர்களே! ஆரியதாசர்களே! நானென்ன செய்வேன் ஏட்டிலுள்ளதை நாட்டவருக்குக் கூறுகின்றேன். நீங்கள் என்ன கம்பராமாயணத்தைக் கல்லாதவர்களா? சொல்கிறேன் கேளுங்கள்.

ஆசைக்கினியவளே! ஆரணங்கே! கிளியே! என்று மணாளன் மனைவியை வர்ணிப்பதைக் கேட்டிருப்பீர்கள். அவளின் மார்பின் அளவைக் கூறியதைக் கேட்டிருக்கமாட்டீர்கள். அப்படி யிருக்க, மனையாளின் மறைவிடத்தைப் பற்றிக் கூறுவதென்றால், மானக்கேடு, கேவலம் என்று கூறுவீர்கள். உண்மைதான்.

இந்தஉலகில் மதபோதனைக்காக என்று மக்கள் கொண் டாடும் எந்தக் காவியத்திலும் காணமுடியாததைக் கம்பரா மாயணத்தில் தான் காணலாம். அயோத்தியாகாண்டப் சித்திரகூடப் படலம் 31 வது செய்யுள் முதலடியைப்பாருங்கள். வனத்தின் அழகைக் காட்டி வந்த பெருமான் இடையில், சீதையின் மனம் மகிழ, அவள் அங்கத்தை வருணிக்கிறார்.

பாந்தள் தேரிவை பழிபடப் பரந்தபேர் அல்குல்

சானகிக்குக் கணவன் தரும் நற்சான்று. அன்பு மனைவியின் அல்குலின் அளவு-அமைப்புப் பற்றி, ஆண்டவன் அரியின் அவதாரம் கூறுகிறாராம்.

பாந்தள்-பாம்பின் படம், தேர்-தேர்த்தட்டு, இவை பழிபட-இவை போதிய உவமை ஆகாததால் பழிப்படைய, பரந்த-பரவிய-அகலமான, பேர் அல்குல்-பெரிய அல்குலை உடையவளே! கணவன் மனைவியிடம் பேசும் பேச்சா இது? இது தான் பக்தி மார்க்கமா? பாம்பின் படமும்-தேர்த்தட்டும் தோற்கும்படியான பெரிய அல்குலைப் பற்றிய பாடல் இல்லாவிட்டால், பகவானின் அவதார மகிமை பக்தர்களுக்குத் தெரியாதா?

டோஸ் 6

செந்தமிழின் சுவை கம்பனின் கவிதையில் கொட்டுகிறது என்,று பேசுகிறார்கள் சில புலவர்கள். ஆபாச வருணனைகள் ஆகுமா? ஆண்டவனைப் பற்றிய , பரமார்த்த போதனைக்குரிய புண்ணிய சரிதமென்று கூறப்படுகின்ற இராமாயணத்திலே ,இத்தனை காமக்காடி இருக்கலாமா? என்று கேட்டால் இது சகசம் என்று அந்தப் புலவர்கள் கூறுகின்றார்கள்.

இது சகசம் என்ற சமாதானத்தை எதற்குக் கூறுவதென்று ஆராயாமல் கூறினால், இந்த உலகில் எல்லாவிதமான அக்கிர மங்களும், ஆபாசங்களும், அநீதிகளும், தாராளமாகத் தாண்டவ மாடலாம். நீதி, சட்டம், வழக்குமன்று, அரசு, ஒழுக்கப் முதலியன வற்றுக்கும் அவசியம் இல்லாமல் போய்விடலாம்

இராமருக்குப் பட்டாபிசேகம், செய்தி கேட்டு மக்கள் நகரை அலங்கரிக்கின்றனர்.. விதம்விதமாக அலங்கரித்துக்கொண்டிருந்தனர்.. அயோத்தி மாளிகைகளிலே, வாழை, கமுகு நாட்டப்பட்டு, தேமார ணங்களாக முத்துமாலைகள் அலங்கரிக்கப்பட்டு, பூரணகும்பங்கள் வைக்கப்பட்டுள்ள காட்சியை கம்பர் பாடப்புகுந்தார். வாழையின் வளம் ,கமுகின் வளர்ச்சி, முத்துமாலைகளின் ஒளி ஆகியவற்றை வருணிப்பதோடு படலப் முடியவில்லை. வீடுகளில் உள்ள ஆடவரின் நினைப்பையுப் நடவடிக்கைகளையும் பிறகு கூறுகிறார். அப்போது, வீட்டின்

முன்னால் கட்டப்பட்டுள்ள வாழை மங்கையரின் தொடை யையும், கமுகு கழுத்தையும், முத்துமாலை மங்கையரின் பல் வரிசையையும் அவருக்கு நினைவுக்குக் கொண்டு வந்துவிடுகின்றன. அங்கிங்கெனாதபடி பார்க்குமிடமெங்குப் நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமாய், தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் என்று கடவுளைப்பற்றிக் கூறக்கேட்டிரு ப்பீர்கள். ஆனால் கமபருடைய கண்களுக்கு வாழையானாலென்ன, கமுகானாலென்ன அரிவையரின் அங்கங்களைப் போலவே தெரிகின்றன. அந்தக் கண்கள் கவிதா கண்களா? காமச் கண்களா?

அயோத்தியா காண்டம் மந்தரை சூழ்ச்சிப்படலம், 30 வது பாடலைப் பா,ருங்கள்

மங்கையர் குறங்கென வகுத்த வாழைகள்
அங்கவர் கழுத்தெனக் கமுக மார்ந்தன
தங்கொளி முறுவலினஇ தாமம் நான்றன.

மங்கையர் குறங்கென-மாதரின் தொடைகள் போல், வகுத்த வாழைகள்--கட்டப்பட்டுள்ள வாழைகள், அவர் கழுத்தென-- அவர்களது கழுத்துப் போல், கமுகம் ஆர்ந்தன--கமுகுகள் நிறைந்தன, தங்கொளி முறுவலின்- ஒளி நிறைந்த பற்கள் போல், தாமம் நான்றன--முத்துமாலைகள் தொங்கின..

தோழர்களே! மாளிகைகளிலே செய்யப்பட்டுள்ள அலங் காரத்தை வருணிக்க வந்தவருக்கு மாதரின் ஞாபகம் ஏன் வரவேண்டும்? கமுகும் வாழையும் கட்டப்பட்டிருப்பதைக் கண்டு, ஊரா, சோலையா என்று ஐயப்பட்டதாகப் பாடக்கூடாதா? மாதரின் அங்கங்கள் தானா வரவேண்டும்?

எனப்பா1 தொடை, கழுத்து, பல்வரிசை என்றால் அதற்கென்ன? ஏன் இப்படிக் கோபிக்கிறாய் என்கிறீர்களா!

பொறுங்கள் அன்பர்களே! மூன்றடி மட்டும் தானே கூறியிருக்கிறேன். நாலாவது அடியிலே தானே ரசம் இருக்கிறது. தொடை கழுத்துடன் விடுவாரா கம்பர்?

கொங்கையின் நிரைத்தன கனக கும்பமே

மாளிகைகளிலே பூரணகும்பங்கள் அமைக்கப்பட்டிரந்தன. அவை மாதரின் கொங்கைகள் போல் இருந்தனவாம். கனககும்பம் என்று கவி கூறியதிலேயே ஒரு விசேடம் உண்டு. கும்பங்கள் அமைப்பால் மட்டமல்ல, பொன்மயமான நிறத்தால்- கன்னியரின் கொங்கைள் தகதகவென்று இருப்பது போல் இருந்தன. ஆடவர்களுக்கு கொங்கைகளின் நினைப்பு இருக்கட்டும், தாராளமாக இருக்கட்டும், வேண்டுமென்றே வலிய அவசியமற்ற

இடங்களில் புகுத்தப் பட்டிருப்பதன் காரணம் என்ன?

ஒரு பெரிய வீரனின் வரலாற்றினை--தேவனின் திருவிளை யாடலை எழுதுகிற இடத்திலே ஓய்வின்றிக் கொங்கைகளின் வருணனையா என்று கேட்கிறேன்?

கம்பராமாயணம் ஒன்றைப்படித்தால் போதும், அந்தமேலிடம் எப்படி எப்,படி அமையவேண்டும் என்ற அங்க இலட்சணத்தை அகில உலகுக்கும் அறிவிக்கலாம்.

மாதரின் கொங்கைகளை வருணித்ததோடு நில்லாமல், எந்த எந்த வயதினருக்கு, எவ்வெவ் வண்ணமாய் இருக்கும் என்ற அமைப்பு முறையைக் கூட, திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். அதுவும் அவர் இந்த அமைப்பு ஆராய்ச்சியைச் செய்த இடத்தைப் பாருங்கள்.

முடி சூடவேண்டிய இராமன் காடு செல்லவேண்டி நேரிடுகிறது, புள்அழ, பூனை அழ, பூவையர் அழ, போர்க்களிறு அழ, கல்லும் கரைந்து அழுததாம் சோகத்தில். இந்தச் சோகத்துள் தான் அந்த ஆராய்ச்சி நடந்திருக்கிறது. இராமனைச் காடேக விடோம் என்று, நகரமக்கள் இராமனைப் பின் தொடர்ந்து செல்கின்றனர். இரவு நகருக்கு வெளியே தங்குகின்றனர். அப்போது அந்த மக்களின் நிலையைக் கம்பர் படம் பிடிக்கிறார்.

அழுத கண்கள், புழுதி படிந்த ஆடை, துவண்ட உடல் இவற்றோடு முடியவில்லைப் படப்பிடிப்பு. இரவு வந்ததும் களைத்த கன்னியர் செவிலித் தாயரின் மீது சாய்ந்து துயில்கின்றனர்.

அரோயத்தியா காண்டம், தைலமாட்டுப் படலம் 11 வது பாடலைப் பாருங்கள்.

> பெரும்பகல் வருந்தினர் பிறங்கு முலை தெங்கின்
> குரும்பைகள் பொரும் செவிலி மங்கையர் குறங்கில்
> அரும்பனைய கொங்கையயிலம்பனைய உண்கண்
> கரும்பனைய செஞ்சொல் நவில் கன்னியர் துயின்றனர்.

பொருள்---பகல் முழுவதும் இராமனுடன் நடந்து களைத்த பெண்களில், கன்னியர்--இளம்பெண்கள், செவிலியர் குறங்கில்-செவிலித் தாயரின் தொடையில், துயின்றனர்-படுத்து உறங்கினர். இது தான் நடந்தது. ஆனால் கம்பன் இதற்குள் ரசத்தைச் கலக்கிறான். கரும்பனைய செஞ்சொல் நவில்--கரும்பு போன்று இனிமையாகப்பேசும் கன்னியர், அயில் அம்பு அனைய உண்கண்-கூரிய அம்பு போன்ற கண்கள், போதாதா? வருணனை போதுப் தானே! ஆனால் மற்றதைப் பற்றிக் கூறாமல் கம்பர் விடுவாரா? அரும்பனைய கொங்கை--தாமரையின் மொட்டுப போன்ற கொங்கைகள், கன்னியருக்குக் கொங்கைகள் இப்படியாயின்,

செவிலித் தாய்க்கு எப்படியிருக்கும்? சொல்கிறார். பிறங்கு முலை--விளங்கும் தனங்கள், தெங்கின் குரும்பைகள் பொரும்--தென்னங் குரும்பைகளைப் போன்றிருந்தன..

இடத்திற்கேற்ற சம்பவத்திற்கேற்ற வருணனை தானா இது? கேட்கிறேன். சத்தியம் வெல்லும் அதர்மம் அழியும், என்ற உண்மையை உணர்ந்து உலகநாயகனின் அருளைப் பெற, இராமாயண பாராயணம் அவசியமாம். உலகம் உய்யவே இந்த இராமாயணத்தைப் பாடுகிறேன் என்றும் கூறுகிறார். ஆனால் உள்ளே இருப்பது என்ன? மாதருக்குக் குரும்பை அளவிலும், கன்னியருக்குக் தாமரைமொட்டளவிலும் முலைகள் இருக்குப் என்ற விளக்கம் தானே?

புகைப்படக் கருவி கொண்டு படம் பிடிப்பதில் மட்டுமல்ல, எக்ச்ரே படம் பிடிப்பதிலும் கம்பர் வல்லவர்

மிதிலையில் சீதை, இராமன் வில்லை உடைத்தவிட்டான், தன் மனதக்கு இனிய மணாளன் கிடைத்தவிட்டான் என்று மகிழ்கிற இடம். இங்கே கம்பர் எக்ச்ரே எடுக்கிறார்..

நோய்களுக்குத் தக்கபடி உடல் உறுப்புகளில் ஏற்படும் மாற்றங்கள் எக்ஸ்ரே மூலம் தெரிகிறது. உணர்ச்சிகளுக்குத் தக்கபடியும் உறுப்புகளில் மாற்:றங் ஏற்படும். அழுதகண் சிவந்திருக்கும், சுரம் கண்டவனின் வாய் உலர்ந்திருக்கும், அதுபோலவே உறுப்புகள் வெவ்வேறு நிலைபெறும்.

எதனை நான் கம்பரின் எக்ஸ்ரே என்று கூறுகிறேன் என்றால், ஆடைக்குள் மறைந்து கிடக்கும் உறுப்புகள் என்ன நிலையில் இருந்தன என்று கூறுகின்றார் கம்பர் அதைத்தான்.

களிப்பால் சீதையின் கண்கள் மலர்ந்தன, ஆனந்தச் கண்ணீர் ஒழுகிற்று, மயக்கம் மாதிரி வந்தது தோழியர் மீது சாய்ந்தாள், இப்படி வருணித்தால் அது சரி. ஆனால் அந்த நேரத்திலே உளம் பூரித்த சீதையின் மறைவிடங்கள் என்ன நிலையை அடைந்தன என்று கூறத்தான் வேண்டுமா? அந்த மறைவிடங்கள் பற்றி விளக்கினால் தான் சீதாபிராட்டியின் பெருமை விளங்குமா? இது தமிழ்ப் பண்பாடா? எந்த நாகரீகத்திலே இப்படி இருக்கிறது.
பாடலைப் பாருங்கள்.--

கோமுனியுடன் வரு கொண்டல் என்றபின்
தாமரைக் கண்ணினான் என்ற தன்மையால்
ஆமவனே கொல்லென்று ஐயம் நீங்கினாள்
வாமமேகலை இற வளர்ந்தது அல்குலே.

தெரிகிறதா? புரிந்து கொண்டீர்களா நடந்த விடயததை?
தோழி--அம்மா வில்லை ஒடித்தார்
சீதை--ஒடித்தது யாரடி? யாரடி சொல்லடி சீக்கரம்.
தோழி-- அந்த முனிவருடன் வந்தாரே அவர் தான்
சீதை--ஆ! அந்தச் செந்தாமரைக் கண்ணனா? என் ஐயன் தான்

சந்தோசம் பிறக்கிறது. உடனே கலீர் என்றொரு சத்தப் கேட்கிறது, சலங்கை ஒலியா? இல்லை, வளையலின் ஒலியா? தூ! அதேன் கம்பருக்கு, கீழே விழுந்த மேகலையின் சத்தப் அது. (பெண்குறியின் மீது அணியும் ஆபரணம்) வாமமேகலை இற--அழகிய மேகலாபரணம் அறுந்து விழும்படி, அல்குல் வளர்ந்தது--பெண்குறி வளர்ந்தது. அப்படிப் பெருத்த வளர்ந்ததால் மேகலை ஈய்ந்து கொடுக்கமுடியாமல், அறுந்து வீழ்ந்தது. முன்னரே கூறப்பட்ட அல்குல் அது. பாந்தள்- தேர்த்தட்டு கூட ஈடாகாத பரவைப்பேர் அல்குல். அது வளரவும் செய்தால்---- ஐய்யய்யோ பயங்கரம்! சீதாபிராட்டியையே இப்படி வருணிப்பவருக்கு, அயோத்திப் பெண்களில் அரும்புகளும், குரும்பைகளும் பெரிய விடயமா!

தமிழினத்தைத் தாழத்தி அழிக்கப் பயன்படுத்தப்படுப் இந்த ஆபாசக் களஞ்சியத்தில், இன்பங்களையும், கவிநயங்களையும் தேடும், கலாநிதிகளையும், இநதக் வடவாரியக் காமக் கிடங்குக்குள் தமிழ் நாகரீகததைத் தேடிச் குவிக்கிற மரமண்டைகளையும், இக் காமரசத்தைப் பாடி, பெண்ணின்பத்தில் பேரின்பம் கண்டு சொர்க்கம் போக எண்ணுகிற ஆசாடபூதிகளையும், விறகு கட்டையில் அடுக்கினால் தான், தமிழினம் தலைநிமிரும்.----தொடருப்


*என்னினிய தமிழன்பர்களே!*

*உங்கள் தமிழ்ப் பசிக்கு விருந்து படைக்க*

*இனிய நறுந்தமிழில் *வாழ்த்துப்பாடல்கள். *திருமண அழைப்பிதழ்கள் *உள்ளத்தை உருக்கும் தமிழில் அஞ்சலிப்பாக்கள் * கல்வெட்டுக்கள் எதுவானாலும் தனித்தமிழ் உணர்வைப் பேணும் நோக்கில் கமலம் மலிவாகச் செய்து தரும் வேண்டியோர் முத்திரை ஒட்டிய மடலுறையுடன் தொடர்பு கொள்க.*

## புதிய தமிழ் வழி

புதிய தமிழ்வழி புகலும் நெறியினைப்
போற்றி எந்நாளும் ஏற்றுவோம் தமிழை!

1. அன்னையிற் சிறந்தது ஆருயிர்த் தாய்மொழி.
2. ஆற்றல் என்பது சிந்தையிற் சிறத்தல்.
3. இரவல் நிதியில் இல்லறம் வேண்டாம்.
4. ஈதல் என்பது இனத்தினுக் குதவுதல்.
5. உள்ளது போதுமென்றுழைப் பொழியாதே.
6. ஊருக்கு முதலில் உனக்கு நீ சொல்.
7. எங்கும் எதிலும் எண்ணித் தெளி.
8. ஏங்கி நில்லாதே எதற்கும் அஞ்சாதே.
9. ஐயரை நம்பி அறிவை இழக்காதே.
10. ஒன்றிடு உறவில் ஓங்க நின் மானம்.
11. ஓதல் அறஒழி வேதம் வடமொழி.
12. ஔவியம் என்பது அன்னியம் போற்றுதல்.
13. கடைப்பிடி தலைவன் காட்டும் வழியினை.
14. காதல் கொள்ளு கடமையின் மீது.
15. கிட்டாதென்றோ காரியமில்லை.
16. கீழ்பட வாழினும் மேம்பட எண்ணு.
17. குறளைக் கற்றுக் குன்றென நில்.
18. கூழுக்காகக் குனிந்து நில்லாதே.
19. கெட்டவர் திருந்திட நற்றமிழ்கூறு.
20. கேடு சூழினும் நாடுன் விடுதலை.
21. கையினை நம்பு கவலைகள் ஒழியும்.
22. கொல்ல வரினும் கொடுமையைச் சாடு.
23. கோதையர் வீரம் கோபுரத் தொளிரும்.
24. கௌவை என்பது கலப்புற மொழிதல்.
25. சரித்திரம் கற்றுச் சரிந்ததை நிமிர்த்து.
26. சாதனை என்பது சாவிலும் வாழ்வது.
27. சிறியோர் தம்மையும் சேர்த்து முன்னேற்று.
28. சிறீதனம் என்பது சீர்மையைக் கெடுக்கும்.
29. சுதந்திரம் என்பது சுகம் தரும் மருந்து.
30. சூதுடை வேதியர் சொற்கேளாதே.
31. செல்வப் பெருக்கில் செருக்கடையாதே.
32. சேரியில் வாழினும் செம்மையைப் பேணு.
33. சைவம் என்பது சால்பின் பெரு வழி.
34. சொல்லு தமிழில் சோர்வு படாது.

35. தமிழை விட்டவன் தன்னைவிட்டான்.
36. தாரம் என்பது தக்கதோர் படைத்துணை.
37. திண்தோள் உயர்த்து தீந்தமிழ் காக்க.
38. தீண்டத் தகாதது ஆரியப் புராணம்.
39. துணைவரைப் போற்று துன்பம் அகலும்.
40. தூண்போல் நில்லினத் துரோகிகள் முன்னே.
41. தெளிந்து ஓது தேன்தமிழ் இலக்கணம்
42. தேர்வெனப்படுவது தேர்ந்துனை அளத்தல்.
43. தையில் மலர்வதே தமிழர் திருநாள்.
44. தொட்டிலில் ஊட்டு வீரம் தாலாட்டால்.
45. தோற்றம் என்பது தோய்தமிழ்ப் புலமை.
46. நன்றெனப்படுவது நட்பினைப் போற்றுதல்.
47. நாளையென்னாதே இன்றே முடி.
48. நின்றிடு என்றும் நாற்குணம் ஏற்று.
49. நீள எண்ணி நினைத்ததை முடி.
50. நுணல் போலன்றி நுழைபுலன் பேணு.
51. நூலெனப்படுவது நுண்மையை நல்கும்.
52. நெகிழ்ந்திடு வுள்ளம் நிறைந்திடுமன்பில்.
53. நேர்த்தி என்பதுன் நேர்மையைக் கெடுக்கும்.
54. நைந்து நின்று நீ நாயாகாதே.
55. நொண்டியாயினும் மனம் நொய்யாதே.
56. நோன்பெனப்படுவது ஆறறிவு ஒழுக்குதல்.
57. பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்.
58. பாதையைத் தெளிந்து பயணம் புறப்படு.
59. பின்விளைவெண்ணி இறங்கிடு செயலில்.
60. பீடது வேண்டின் வேடமது கொள்ளேல்.
61. புண்படப் பிறர்மனம் புறம் பேசாதே.
62. பூவின் இனியர் பூவையர் போற்று.
63. பெண்மை என்பது பெருவலி வைரம்.
64. பேதைமை என்பது பெண்டிரை வருத்துதல்.
65. பைந்தமிழ்ப் பாட்டால் பரவிடு இறைவனை.
66. பொறுமை விட்டொழி இனமொழிப் பணியில்.
67. போர்க்குணம் பேணு ஊர்க்கது நன்று.
68. மனையறம் விட்ட மாதரைப் பேணேல்.
69. மாண்பெனப்படுவது மனையறம் காத்தல்.
70. மிடுக்கொடு புறப்படு மீண்டும் முயன்றிட.
71. மீண்டும் மீண்டும் முயன்றிடு வெல்வாய்.
72. முட்டாள் என்று எவரையும் இகழேல்.

73. மூத்தோர் சொல்லேனும் முடிவெடு தெளிந்து.
74. மெருகினும் பெரியது மேன்மைச் செயல்கள்.
75. மேற்குலம் என்பது மேதைமை மிக்கோர்.
76. மைந்தரை ஊட்டு மானம் பெரிதென.
77. மொழியெனப்படுவது தன்னுயிர் உணர்வு.
78. மோட்சத்தை நம்பி மோசம் போகாதே.
79. வலிமை என்பது சுற்றம் சூழல்.
80. வாழ்வாங்கு வாழ்ந்து வானத்துயர்.
81. விதியென எண்ணி வீணாள் கழியாதே.
82. வீரம் என்பது வீழினும் அஞ்சாமை.
83. வெற்றி என்பது வீரம் விளைப்பதே.
84. வேதனை என்பது வேற்றார்ப் போற்றுதல்.
85. வைபற்று நாட்டில் வாழ உன்குடி.
86. வெளவுதல் என்பது வயிற்றுக்கு வாழ்வதே.

------------

விளக்கங்களும் அருஞ்சொற்களுப்

சாலையார்= சாலை இளந்திரையன் என்றழைக்கப்படும் மறத் தமிழ்ப் பேரறிஞன்.

பரிமேலழகன்= திருக்குறளின் முதல் உரையாசிரியனாகி, பார்ப்பார நலம் சார்ந்து, குறளுக்குப் பொய்யுரை தந்தவன்.

புகலும்=சொல்லுகின்ற. ஒளவியப் =பொய். கெளவை= ஊர்வம்பு. வேதியர்=பார்ப்பார். தோற்றம்=ஊரறிய வாழ்தல். நாற்குணம்= (பெண்)அச்சம்,மடம்,நாணம்,பயிர்ப்பு. (ஆண்) அறிவு, நிறை,ஓர்ப்பு, கடைப்பிடி. நுண்மை=கூரிய அறிவு. பீடு=பெருமை. மெருகு= ஆடம்பரம், வெளிப்பூச்சு. வெளவுதல் = திருடுதல்.

இழிதகவு=தலைகுனிவு, சேய் =பிள்ளை. மன்றல் =திருமணம். மன்றலர்கள்=மணமக்கள். மன்றேறுப் =மேடையேறும். அகவை= வயது

டெனிஸ்ராஜ்- டெனிசா= டென்மார்க் நாட்டில் பிறந்த தன்மகனுக்கும் மகளுக்கும் தமிழ்த்தந்தை சூட்டிய பெயர்கள்.

அன்புத் தமிழீழ மக்களே! உலகத் தமிழினமே!

- ➔ தாம் வாழத் தமிழழிக்கும் தமிழ் விரோதிகளை.
- ➔ ஆரியத்தின் அடிதடவும் அடிமைத் தமிழர்களை.
- ➔ தமிழிருக்கப் பிறமொழிக்குப் புகழ்பாடும் தரங்கெட்ட தமிழர்களை.
- ➔ தமிழர் பண்பாட்டைத் தாழ்த்தி நிற்கும் ஆரிய ஆபாசக் காவியங்களைப் போற்றும் தமிழ்ப் பேதைகளை.
- ➔ எழுந்தமானத்தில் எழுதுகின்ற நானும் எழுத்தாளன் என்கின்ற தமிழ்ப் போலிகளை.

தமிழால் அடித்துத் திருத்தி நேர்ப்படுத்த கனலில் மலர்கிறது

*கமலம்*

கதிரவனின் வரவால் விடியல் கண்டு மலரும் கமலம்— வண்டினங்கள் மதுவாடிக் களியாட, மங்கையர்கள் குழல் சூடி மகிழாட— மலரும் மலரல்ல, தமிழின் பகைகண்டால், தமிழறியாத் தமிழனைக் கண்டால் கனன்று எரிக்கக் கனலில் மலரும் மலர்.

இடைக்கால வரலாற்றில் தமிழனைவிட, ஐயந்திரிபறத் தமிழ் கற்று, தமிழின் உயர்வு கண்ட பார்ப்பார். தமிழனைத் தாழ்த்திவிட தமிழ் ஏடுகளைச் சூழ்ச்சியினால் அழித்தும், அழியாதவற்றை உண்மைக் கருத்துக்களை மாற்றிப் பொய்யுரை தந்தும் ஏமாற்றி, தாம் வாழத் தக்கவற்றை, கடந்த பன்னூறு ஆண்டுகளாக இடைவிடாமல் செய்து, தமிழனைத் தாழ்மைப் படுகுழியில், சாதிச் சகதிக்குள் தள்ளி மீளவிடாமல் வைத்திருக்கின்றனர். இந்த வடவாரியச் சதியை தமிழுலகுக்கு காட்டுவது கமலத்தின் முதற்பணி கமலம் ஒரு பொழுதுபோக்கு இதழல்ல. ஆய்வுத் தொகுப்பு நூலான முத்திங்களேடு. கமலத்தின் எண்ணத்தடிப்படையில் சீர்திருத்தக் கருத்துடையோரின் சிந்தனைகள் வரவேற்கப்படும்.


தொடர்புகளுக்கு

Kamalam

Zur Friedrichsburg. 10. 48268 Greven


கொண்டாரைக் காதல் காதலித்தக் காதலினால்
கொண்டாடி மகிழ்தந்து குவலயத்துள் – கொண்ட
புகழ்க்குன்றின் உச்சியிலே ஏற்றிவைத்தவ் வின்பத்துள்
திகழ்வாள் அவளே தமிழ்.------*தமிழ்மணி நா.சி.கமலநாதன்*

*பின் அட்டைப் படத்திற்குப் பொருத்தமான கவிதை ஒன்றை எழுதி 10.11.98 க்கு முன்னர் தொடர்பு முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.*

# காலம்

